உ

பரமபதிதுணை

ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிராமா[illegible]

T. நாராயணசாமிபிள்ளை கம்பெனியா[illegible]

முதலியோர்

நடித்துவருகிற

அதியற்புத நவீன பார்ஸீ

சத்தியவான் சாவித்ரி.

ஓர் கற்டலங்கார நாடகம்.

முதற்பாகம்.

இஃது

முத்தமிழ் க்ஷேத்திர வித்வரத்தினம்

தி. நீ. சதாசிவதாஸ் அவர்களால்

இயற்றப்பெற்றது.

மதுரை புத்தகவியாபாரம்

T. கிருஷ்ணசாமிபிள்ளை

வெளியிட்டது.

[illegible]] 1922 [இதன் விலை அணா 4

1- JUN 1922

O-,1 MSS9,S
M922
17546

...சம் பிர...

பிழை திருத்தம்.

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்.
2	27	வெந்தாய்	லெந்தாய்
12	25	றந்தவனம்	நந்தவனம்
,,	32		சங்கரதேவா சர்வசம்பவா (சம்)
30	26	(சத்)	(நிச்)
,,	29	மத்ராபுரிக்கு	சால்வபுரிக்கு
37	4	மைந்தனான	மைந்தனான்
48	9	வருகுவே	வருகுருவே

குறிப்பு.

மேற்சொல்லியவாறு முதலில் பிழைகளைத் திருத்திக்கொள்வது மிகவும் நலம். இவை தவிர அச்சுப்பிழைகள் இன்னும் இருப்பின் அவைகளையும் திருத்தி யமைத்துக்கொள்வது கண்ணியமிகுந்த எனது நண்பர்களின் கடன்.

இங்ஙனம்,

அ. ச. சதாசிவன்.

இதின் முதல் பாரம் மதுரை, ஸ்ரீஜ்ஞான சம்பந்த விலாஸ் பிரஸிலும், மற்ற ஐந்து பாரங்கள், மதுரை வடக்குமாசிவீதி, மனோன்மணி விலாசம் அச்சியந்திரசாலையிலும் அச்சிடலாயின.

உ

பரமபதி துணை.

பார்ஸி

சத்தியவான்-சாவித்திரி

சரித்திரம்.

1- JUN 1922
MADRAS

விநாயகர் துதி.

காப்பு வெண்பா.

தாரணியிற் கற்புமிகு சத்தி வான் சாவித்ரிப்
பேரணியு மாசரிதம் பேச ற்குச்—சீரணியுந்
துங்கக் கயவதனத் தொந்திக் கணபதியின்
தங்கக் கழலிணையே சார்பு.

இஸ்குபுராசஞ்சால்-என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

சுந்தரகணநாதா வந்தாளுவாய்
தோகை வல்லபையுட னுகு வாகனமேறி (சுந்)

அநுபல்லவி.

கந்தமாமலர்ப் பாதா வந்தாளுவாய்
தோகை வல்லபையுட னுகு வாகனமேறி (சுந்)

சரணங்கள்.

சந்ததமுமேவுந்தன் தாளிணையைப்பணிந்த
மைந்தனென் முன்னுகந்தே வந்தாளுவாய் (தோ)

சித்திமுத்திசுகனே தேவியுமைமகனே
சித்திவிநாயகனே வந்தாளுவாய் (தோ)

சங்கரசதாசிவ சாமிதமிழ்க்குதவ
துங்கசெங்கணபதியே வந்தர்ளுவாய் (தோ)

கலைமகள் துதி.

கட்டளைக்கலித்துறை.

பூவிற் றிகழ்தரு கற்பினளானவோர் பூங்கொடியாள்
சாவித்ரி சத்யவா னென்னுநன்னாமச் சரிதமதைப்
பாவிற் றெளிவா யிலங்கிடு நாடகம் பகுதற்கு
நாவிற் குடியுறு வாணிதாள்போற்றி நனியுரைப்பாம்.

ஜாண்டோ ஜாண்டோஜி-என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

தண்டாமரை மேனி ராணி-முத்
தமிழின்வித்வ வாணி
சாரதா கல்யாணி. (தண்)

அநுபல்லவி.

பண்டிருந்தேவி பாலனெந்தனுவில்-குடியிருப்
பாயன்பாய் மேவி தின்
பதமலரிணைச் சதமெனச்சதா துதித்தேன் (தண்)

சரணங்கள்.

காயத்ரியம்மா கருணைசெய்குவாய்-உனதருட்
காட்சியீ குவாய் மூன்
கம்பனுக்கோர்காற்சி லம்பைய ளித்திடு மம்பாள் (தண்)

சாரதமுன்புகழே சதாசிவன்றமிழே-சரணாத்
தாரணி கமழே இச்
சரிதப்பாவின்ம துரிதப்பாக்கிய மருள்வாய் (தண்)

ஸ்ரீசிவ சுப்பிரமணியக் கடவுள் துதி.

கட்டளைக்கலித்துறை.

கந்தா சரணங் கடம்பா சரணங் கடவுடரு
மைந்தா சரண மயிலா சரண மணிவடிவே
வெந்தாய் சரண மிறைவா சரண மினியதமிழ்
தந்தாள் சரணம் பரங்கிரி வாழ்சிவ சண்முகனே.

தேக்குங்கா மேரா-என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலனே சிறு பாலனையாளையா (வே)

அநுபல்லவி.

வேலனே ஞான வேலனே ஞான (வே)

சரணங்கள்.

ஞாலமீதுன்னையே நம்பினேனென்னையே
நழுவிக்காம்விடுக்க நழுவிக்காம்விடுக்க
ஞாயமோ அரி மாயவன்மருமகனே (வே)

காலனையுதைத்த கர்த்தனுக்குரைத்த
கந்தனே சந்ததமுங் கந்தனே சந்ததமுங்
காவையாதிருச் சேவடிதினம் பணிந்தேன் (வே)

பாலபிஷேகா பாதுகாயோகா
பரைமகிழ்ந்தருளிய பரைமகிழ்ந்தருளிய
பாலனே திகழ் நீலமாமயில்வாகனா (வே)

சாலவிக்ஞாதம் சார்ந்த சங்கீதம்
தமிழுறைமதுரித தமிழுறைமதுரித
சங்கரசதாசிவ சாமிக்கருளும்வடி (வே)

அங்கம் 1. 1-வது சீன்

சாலவபுரி தியுமத்சேனன் தர்பார்

பியாரேதேக்கோ-என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

மோன மோக்ஷ சாக்ஷாத் கடவுளர்
முத்த லத்த வர்க்குத் தொண்டன்
இத்த லத்த வர்க்குத் தண்டன் (மோ)

அநுபல்லவி.

ஞானம் ஆறுசாஸ்திரம் நான்குவேததரூஸ்திரம்
நற்புராண தத்துவம் நனியுணரும் பிரசண்டன் (முத்த)

சரணங்கள்.

திக்கெட்டுமேகலங்க ஜெயபேரிகை முழங்க
பக்கப்பதியரசர் பயமென்றடிவணங்க
சக்ரவர்த்தியென் செங்கோல் சத்யதர்மம்விளங்க
சதாசிவசாமி
சற்பாத்திரமிலங்க. (முத்த)

கடவுள் வாழ்த்து.

விருத்தம்.

சங்கரா சிவமேபோற்றி சாக்ஷாத்தற் பரனேபோற்றி
மங்கையோர் பாகாபோற்றி மதிநதி யுடையோய்போற்றி
பொங்கர வணிந்தாய்போற்றி பூவிற்சா லவபுரியைத்
துங்கமாய்க் காக்கவைத்தாய் தொண்டனுன் போற்றிபோற்றி.

ஷை துதி.

நம்பினேனுனையே-என்ற வர்ணமெட்டு.

இராகம் கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சம்போ சங்கரனே மீ
னம் பி கைதொ ழும் பரனே. (சம்)

அநுபல்லவி.

அம்பலத்தா டும்பரம
னும்பதந்தி னம்பணிந்து
நம்பினோர்க் கருள்புரிந்து
நாளுங் காப்ப தேவுன் பாரம் (சம்)

சரணங்கள்.

சந்ததமுன் கந்தபாதஞ் சிந்தனைசெய் மைந்தனுக்கே
வந்தருள் செய் யாதிருந்தால்
வாகா மோக பால சூல (சம்)

ஆலமுண்ட வாயனேநின் னடிபணிசெய் தொண்டனன்றோ
சாலவபுரி யானப
சாக்ஷி செய்யக் காக்ஷி தாரும் (சம்)

திங்கள்கொன்றை கங்கையோடு பொங்கரவ ணிந்தயீசா
சங்கர சதாசிவன்பா
சாற்றி யேயான் போற்றி போற்றி (சம்)

வசனம்:— திருவாலவாய், திருவாரூர், திருக்கடையூர், திருத்தில்லை, திருக்கைலாயம் முதலிய திருக்ஷேத்திரங்களிற் சிவமயமாகிய திருவாலயங்களி லெழுந்தருளியிராநின்ற சாக்ஷாத் சதாசிவ பரமேஸ்வரக் கடவுளே! அடியேன் இந்தச் சாலவபுரியெனும் நகரத்தைச் செங்கோல் வழுவாது அரசுபுரிய நினதருள்புரிக.

சேவகன்:— மகராஜ்! சேவகன் வந்தனம்.

அரசன்:— கல்யாண்! சேவகா! நமது முதன்மந்திரியைச் சீக்கிரம் அழைத்து வருவாயாக.

மந்திரிவருதல்.

ஹமா நபி-என்ற வர்ணமெட்டு.

இராகம்-அமீர்க்கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

சிவமயமே காணுஞ்
சிந்திப்போமியாமே (சிவ)

அநுபல்லவி.

சிவமயமே யோக தவமயமே-சதா (சிவ)

சரணம்.

புவனரக்ஷகதுங்கர் போந்தகிருபாசங்கர்
மவுனச்சுயம்புலிங்கர் மாதுமையாளோர்பங்கர்

மலரயனரிபுக மூலவியவடிமுடி
நிலையுறவிசைத்திடு மலஹரபரசதா (சிவ)

(தொகையறு.)

அரஹரசிவாயம் மகாதேவசம்போவென்
றடியார்போற்றும் சரண்யன்
அருமறையெலாமுறையு னிபொருளன் பானவர்கட்
கனவரதகா ருண்யன்

பாட்டு மகுடம்.

அமரர்கள்சிறைதவிர்த் தருளவும்விழிமிசை
குமரனையருளிய விமலனிமலசதா (சிவ)

வசனம்:— "இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த வகுத்த லும் வல்லதரசு "யென்ற மூதுரை வழுவாது அரசுபுரியும் வள்ளலே" மந்திரி வந்தனம்.

அரசன்:— கல்யாண்! மந்திரி! எனக்கு முன்னதாகவே யிங்கு வீற்றிருக்கக் கூடிய தாம் இதுவரை ரொதகாரணம்யாது? மேலும்இரணபேரிகைச் சப்தங்கேட்கின்றதே அதன்விபரமென்ன? சீக்கிரந்தெரிவியும்.

மந்திரி:— இராஜசேகரா! அக்காரணத்தால்தான் யான் வரத்தாமதம். கலிங்க தேசத்தரசனாகிய கஜகேதுராஜன்படை யெடுத்துவந்து நமது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு வெற்றி கூறி நிற்கிறான். அரசே! "மாற்றானுக் கிடங்கொடேல்" யென்றபடி நாம் மிதமாயிருக்கலாகாது. ஆகையால் நமது சைனியங்களை ஆயத் தப்படுத்தி யிங்குவந்திருக்கிறேன்.

அரசன்:— மதியூகமந்திரி! இதுவென்ன ஆச்சர்யம்! ஈஸ் வரசோதனையோ? "அவனன்றி அணுவசையா" தென்பதுபோல் எல் லாம் அவன் செயலேயாம்.

௯ தரு.

அடைக்கலமே என்ற வர்ணமெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

சம்போசிவா சாக்ஷாத் சதாசிவா (சம்)

அநுபல்லவி.

அம்பிகையாள்பாக மானவரோ கரா (சம்)

சரணங்கள்.

ஞாலமீதுன்னருளாற் சாலவபுரிதன்னை
நானரசாண்டிருந்தேன் தீனதயாளனே (சம்)

காலகெதியிதுவோ கஜகேதுபடைவந்து
நாலுதிசைகளிலும் நாடிடலாச்சுதே (சம்)

மைந்தனுமீங்கில்லாது மறுநகர் சென்றிருக்க
இந்தவேளையில்மாற்று ளீங்குறலாச்சுதே (சம்)

அந்தணர்முனியொடு வந்தவகுதிகளை
நிந்தித்தேனோவாசில் நீதிதவறினேனோ (சம்)

வசனம்:— ஹே! ஜெகாக்ஷகா! தில்லைவாசா! தீனதயாளா! திருக்கைலாயா! யான் ஒருகுற்றமுஞ்செய்தறியேனே! ஈசா! கலிங்கதேசத்தரசனான கஜகேது யென்பவன் யென்மீது படையெடுத்துவர ஒரு காரணமுமில்லையே! நின்பாதாரமே கதியெனப்போற்றி அப்பாக்கியத்தாற் கிடைத்த யென்பாலகனான சத்தியவானும் மணிபுரஞ்சென்றிருக்கிறான். தற்போது யெனக்குப்படைத்துணையு மில்லையே! யானென்செய்வேன்? இதுசமயமிவ்விதக் கஷ்டத்தைக் கொடுத்தனையே! தேவா! (மந்திரியை நோக்கி) சுமாலி! நமது புத்திர சிகாமணியான சத்தியவானை அதிசீக்கிரம் சென்று அழைத்துவாரும்.

மந்திரி:— இராஜேஸ்வரா! மாற்றானான கஜகேதுபடை நான்கு திக்கினுஞ் சுற்றிக்கொண்டிருக்கிறதே! நானெவ்விதஞ் செல்வேன்?

அரசன் தரு.

கோலத்திருவனையாயதி குணரஞ்சித மயிலே என்ற

கண்டிராஜா நாடக வர்ணமெட்டு.

(தி)

கண்ணிகள்.

வருவாயென தருகாயினி மதியூகரன் மந்த்ரி
வசமோவக மிகரோகுது மகிமேழபுரி தந்த்ரி

மறுமாதக ராசேபுரி கஜகேமென்னு மாற்றான்
மயசாலவ புரிமேற்படை கொடுமேவிய கூற்றான்

தனேயேகொடி தனிலேசதி செயவேபடை கூட்டி
ததியேசெலத் துணைவேறில தயவாயிகல் நாட்டி

இனிமேமணி புரமேகியு மெனதாருயிர்ச் செல்வத்
தனயானசத் தியவானிடஞ் சகித்தாரமுஞ் சொல்லி

விரைவாயழைத் தினிதாகவென் முனமேவரு வீரே
விடையீதொரு தடைகூறிடா விதமேசெலு வீரே

தரையாளுமன் னவர்பாலுறை தளமேதகு மினேயே
தவமேபெறு குசதாசிவ சரணாமுந் துணேயே

வசனம்:— சுமாலி! ஈச்சுவரன் கிருபையாலெனக்குக் கிடைக்கப்பெற்ற புத்திர சிகாமணியான சத்தியவானே இதுசமயம் யீங்கழைத்துவந்தால் தான் இந்தக்கஜகேதுவினுடைய கர்வத்தையடக்கியவன் இராஜ்யத்தைக் கைப்பற்றுவதுமல்லாமல் நாமுந்தப்பிக்கலாம். இல்லேயேல் மிகுந்த கஷ்டத்திற்காளாகவேண்டும். நீ பயப்படாமற் சென்று அழைத்துவருவாய். நீவந்தபின்புதான் போர்தொடரவேண்டும் சிக்கிரம்.

சுமாலி:— உத்தரவு மகாராஜ்! நான் மணிபுரஞ்சென்று சத்தியவானே அழைத்துவருகிறேன். தாங்களிவ்விடத்தில் நடக்கவேண்டியதை வெகு ஜாக்கிரதையாய் நடப்பியுங்கள். வந்தனம்.

அரசன்:- மந்திரி! நமது படைவீரர்களே அதிசீக்கிரம் வரவழையும் நான்போர்க்களம் செல்லவேண்டிய முயற்சிசெய்கிறேன்.

படைவீரர்கள் வருதல்.

தூரதூ-தூரதூ-யென்ற வர்ணமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஏகம்.

பல்லவி.

வீரரே தீரரே

வெகுவிரைவினில் வருகுவீர்படை (வீர)

அநுபல்லவி.

ஆரவாரமுட ணுக்ரமித்தெழுந்து
அயலவனிகற் படைமுனுகந்து
போரதனிற்பல விதமேபுரிந்து
புடைத்து நொறுக்கிப்
பிடித்து வதைப்பம் (வீர)

சரணம்

ஈட்டிதுப்பாக்கிக் கத்திக்கேடயமும்
இருப்புலக்கை பாலாடால்மருடும்
தாஷ்டீகமாம்பல்லா யுதங்களெடுத்துத்
தத்திக்குத் திக்கட்டித்
திக்குத்திக் காடுவம் (வீர)

வசனம்:— மஹாராஜா! படைவீரர்கள் வந்தனம். யார் நமது நகரத்திற் படையெடுத்து வந்தாலும் க்ஷணநேரத்தில் ஜெயித்து வெற்றிக்கொடி நாட்டிவருகிறோம்; உத்தரவு கொடுக்க வேண்டும்.

அரசன்:— படைவீரர்காள்! இதோ யானும் யுத்தக்கோலம் பூண்டு வந்தேன். புறப்படுங்கள் யுத்தஞ்செய்வோம்.

அங்கம் 1, 2-வது சீன்.

போர்க்களம்.

(கஜகேதுவுக்கும் துயுமத்சேனனுக்கும் யுத்தம்)

சாரங்கந்தன்னிலோர் சர்ப்பக்கணை யென்றமெட்டு
இராகம்-அடாணு தாளம்-ரூபகம்

கண்ணிகள்

(துயு) தீரமுடனென்முன் போரிடவேவந்தாய் வீராய்-அட்ட
திக்கும்ப தைக்கவி டுக்கிறேன் கைக்கணை யாராய்
ஆரவாரஞ்செய் தணிவகுத்தசேனை
அனைத்தையும் க்ஷணத்திலென்
கணைக்கிரை கொடுக்கிறேன் (தீர)

(கஜ) வீரியங் கூறிவிஸ் தாரஞ்செய்தாயிந்த வேளை-நானே
விண்ணுலகுன் னுயிர்நண்ணிடச்செய்வேனிந்நாளே
பாரடாயெந்தன் பராக்கிரமந்தனைப்
பதைத்திடச் சிதைத்திடச்
சதக்கணை விடுக்கிறேன் (வீரி)

(துயு) மெத்தக்கத்திச்சுத்தித் தத்திக்கீழ்வீழாதேவீணு-பென்கை
வில்லா லடித்துனைக் கொல்லாதினிவிடு வேனு
சித்தமி குத்ததி டத்தைய ழித்ததி
ஜெயபேரிகை நயமாமுழக்
கியிதோகொடி மய நாட்டுவேன் (தீர)

(கஜ) இத்ததி யுத்தக ளத்திலு னைத்தறித் தினியே -யிவ்வி
ராச்சியங்கைப்பற்றி யாக்ஷிசெய்வேனிது துணிவே
நத்திப்பலவித நாட்டம்பண்ணுமலே
நடடாதுயர்ப் படுவாய்திடம்
விடடாததி யடடாபல (வீரி)

[துயுமத் சேனனின் படை ஓடுகின்றது]

கஜ; வசனம்:— அடா துயுமத்சேனு! எங்கே உன்னுடைய வீரதத்துவம்? இனிமேலுன்னு லென்னவாகும்? சற்றுமென்னை மதியாது பேசி யென்ன ஜெயங்கொண்டாய்?

[கஜகேது படைவீரர்கள் துயுமத்சேனனைத் தூற்றுதல்]

நட்டகல்லைத் தெய்வமென்று என்ற வர்ணமெட்டு.

இராகம்-சாவேரி தாளம்-ஆதி

கண்ணிகள்

சிற்றரசி லுற்றதுயுமத் சேனனேகே ளனதை
கொற்றவனுக்குற்றகப்பங் கொடுத்திடிலேதீனமே
உற்றநகர் முற்றுமிழந் தொண்டியாகி நின்றனை
நற்றகைமை யற்றநீ நயமொழிபு கன்றனை.

நத்தியேமி குத்தவீர தத்துவத்தி னீடியே
யுத்தமேவி னைத்துஆகு லத்துளான பேடியே
எத்திசைக்குங் கர்த்தனான வெங்கள்மன்னன் கீர்த்தியை
சித்தத்தே மதித்திடாத தேமடமை நேர்த்தியே.

வசனம்:— அடே! எப்பொழுதொரு முதல் வள்ளலுக்குக் கப்பங்கட்டுமுறை முன்னோர்களாலேற்பட்டிருந்ததோ அவ்விதம் நடந்து நயம்பெறாமல், வருகிற தூதர்களுக்குச் சரியான முகாந்தரமுஞ் சொல்லாமல் வீண் காலங்கடத்தி வந்தாய்; ஆகையால் அரசன் உன்மீது படையெடுத்துவந்தார். நீயு மிக்கெதிக் காளாயினை. என்ன துன்பமடையப் போகிறாயோ இன்னும்!

கஜகேது:— ஹே படைவீரர்களே! இவன் பத்தினியாகிய பத்மாக்ஷியையு மிழுத்துக்கொண்டுவந்து இருவரின் கண்களையுங் கொய்து காட்டில் விட்டுவாருங்கள்.

சேவகன்:— மகராஜ்! உத்தரவுப்படியே இருவரையுங் கண்களைக் கொய்து காட்டி லோட்டிவிடுகிறோம்.

அங்கம் 2, 1-வது சீன்.

கானகம்.

[துயுமத்சேனனும் பத்மாக்ஷியும் புலம்பல்]

கானகத்தில் காமலேந்து என்றமெட்டு.

இராகம்-முகாரி தாளம்-ரூபகம்

கண்ணிகள்

தெய்வமேயாமென்னசெய்வோம் சித்தமிகவும் நோகுதே
ஐயையோயினியெங்குய்வோம் ஆவிபதற லாகுதே (தெ)

மண்ணிழந்துமதியிழந்து மணிமுடியரசிழந்து
கண்ணிழந்துவாடலானோம் காத்தருள்ப ராபரமே (தெ)

மைந்தனில்லா வேளைதனில் மாற்றான்படையுடனே
வந்தெமைவருத்தியிந்த வனத்திற்றுரத்தினனே (தெ)

இருளடைந்த கானகத்தில் எவ்விதம்வ சித்திருப்போம்
தருணமெமையாள்தவமே சங்கரச தாசிவமே (தெ)

வசனம்:— சம்போ மகாதேவா! சதாசிவமாய் நிறைந்த சாக்ஷாத் பரமேஸ்வரக்கடவுளே! அடிமையாகிய நாங்கள்யென்ன குற்றம் செய்தோம்? இராச்சியத்தையும் ஐசுவரிய மனைத்தையு மிழந்ததுமல்லாமல், கண்களையும் பறிகொடுத்து சதிபதியிருவருங் கானகத்தில் கைகோத் தலையும்படி விதித்தனையே! தேவர்கள் சகாயா! மணிபுரஞ் சென்றிருக்கும் எம்மது அருமை மைந்தனை யழைத்துவரச்சென்ற சுமாலியையுங் காணோமே! கருணாகரா! என்செய்வோம்?

துயுமத்சேனன் தரு.

கார்த்திகா நித்யகல்யாணா என்றமெட்டு

இராகம்-அமீர்கல்யாணி தாளம்-சாப்பு

கண்ணிகள்

சம்போமா தேவாதி தேவா சங்கரா
கதியெமைக் காவா
அம்பிகை பாகமே தாவா நேனேதான்
ஆனாதி பாவா (சம்)

நம்பினேனெம்பிரா னுனையே தொண்டனில்
நானொரு தனையே
வெம்பிட வைத்தாய்நீ யெனையே மூண்டதோ
விதிப்படி வினையே (சம்)

ஆலவா யம்பல வாசா அண்டினேன்
ஆரூர்க்கை லாசா
பாலனென் பால்பவ நாசா அருட்கண்
பாருஞ்சர் வேசா (சம்)

காலகா லக பாலனே பக்தரைக்
காக்குஞ் சீலனே
கோலமிகுந்த சூலனே வந்தாசி
கூறு மூலனே (சம்)

வசனம்:— ஹே! புவனரக்ஷகா! அடிமையாகிய நாங்கள் யென்ன பாவத்தைச் செய்தோம்? திக்கற்றவர்போல அலையலானோமே யீசா!

அங்கம் 3. 1-வது சீன்

மத்ராபுரி நந்தவனம் தென்புறம்.

[சத்தியவானும் மாடஸ்யனும் இளைப்பாறுதல்]

சத்தியவான் தரு.

சங்கல்பமேயென்ற வர்ணமெட்டு.

இராகம் - பூர்வகல்யாணி தாளம் - ஆதி

பல்லவி

சம்போ சிவா சாக்ஷாத் தந்தவா (சம்)

அநுபல்லவி

பண்பாபரா பரம சுந்தரா
அன்பா வெனையாளரா அரோகரா (சம்)

சரணம்

சம்புலிங்க திவ்ய சகல்த்ர சொரூபா
அம்பிகை யோர்பாகா அருங்காலக்ஷேபா
சம்பூரணா சர்பாக்ஷகாரணா
சங்கர சதாசிவ சரணாரணா (சம்)

வசனம்:— மாடவ்யா! நாம் நெடுந்தூரமிருந்து குதிரை மீதேறி வாயுவேக மனோவேக மென்பதுபோல் வேகமாய் வந்ததால் நமக்கும் நம் குதிரைகளுக்கும் சிரமமா யிருக்கிறது. முன்னதாகக் குதிரைகளை ஜலமிருக்கு மிடத்திற் கொண்டுசென்று குளிப்பாட்டி ஜலமருந்தச்செய்யவேண்டும்.

மாட:— ஆம் நாம் வரும்போது காற்றதிச மாதலால் அக் காற்றுடனே யென்குதிரைகலந்து அதேவேகமாகத்தான்வந்தது.

சத்:— சரிசரி. நீ சீக்கிரமாகச்சென்று குதிரைகளுக்கு ஜலங் காட்டிவிட்டுவா.

மா:— இதுவென்ன அநியாயம்? நானோ குதிரைச் சவாரி செய்து பெருமூச்செறிந்து தாகவிடாய்ப்பட்டு களையால் வாடி யிருக்கிறேன். நானாவது குதிரைக்கு ஜலங்காட்டுவாவது; என்னால் முடியாது.

சத்:— ஆனால் நீயிரு யான் சென்று வருகிறேன்.

மாட:— வேண்டாம். கோபித்துக்கொள்ளாதே. நானே சென்று குதிரைகளைக் குளிப்பாட்டி ஜலமருந்தச்செய்து உனக்கும் ஜலம் கொண்டுவருகிறேன்.

[மாடவ்யன் போகிறான். சத்தியவான் ஓர் மேடைமீது அமர்ந்து, தென்றலினாற் களைப்புத் தோன்றாது உல்லாசமாய்ப் பாடிக்கொண்டிருக்கிறான்.]

அங்கம் 3. 2 வது சீன்

மத்ராபுரி நந்தவனம் வடபுறம்.

[சாவித்திரி சகிகளுடன் உள்ளே பிரவேசித்தல்]

மகாவதிகுண மாதரே வேகமா வென்ற மெட்டில்
பின் அடுக்குச்சந்தம்.

கண்ணிகள்

சா.— சுதாவதிகுண சந்தர மாதரே
சுகானந்தமுற சூழ்ந்து வருவீரே

சகி:— சுகிதமலர்வனச் சோலையை நாடியே
துணையாயிருந்துமைச் சூழ்ந்துவருகிறோம்

சா:— சதாசிவமய தவஜெபமுறையே
சாற்றுமென்பாலிணை தாதிகாள்வருவீர்

சகி:— சௌபாக்கியவதி தையலர் நாயகி
சாவித்திரிதேவியே சார்ந்துவருகிறோம்

சா:— சந்த தந்த குந்த கந்தந் தந்த சோலையே
சகி:— சண்ப கங்க தம்ப முந்த தும்பு மாலையே
சா:— சந்தி ரந்தி மிர்ந்தி ணைந்து கந்த சாலையே
சகி:— தங்கியிங்குறுங்குணங்க ளுங்கொள்வேனோயே
சா:— சரிசரி விரையுறை தானத் தாழையே
சகி:— தத்தைமேயு மாபலா தழைத்த வாழைபார்

சா; வசனம்.—சகிகாள்! இதோ பார்த்தீர்களா! இந் நந்தவனமென்ன அழகா யமைந்திருக்கிறது! ஆஹா! குளிர்ந்த தென்றலில் மிகுந்த பரிமளமுண்டாகிறது. வாருங்கள் சோலையி னுள்ளே செல்வோம்.

ஷை தரு

திருப்பழநியூர்ப் பொருப்பிலமர்ந்ததேயென்றசிந்துமெட்டு
இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

கண்ணிகள்

திகழூறுமதி முகவனி தையரே
சிங்காரச்சோலைபாரீர் தங்காமலென்பின்வாரீர் மாவி
சித்திரங்காணம கத்துவச்சேடியரே என்
சிந்தைமகிழவி ரைந்துமலர்கள்சு
கந்தபரிமளம் வந்துமயக்குதே (திக)

தகுந்தமல்லிகை சண்பகமும் ரோஜா
ஜாதிமலரிருவாச்சி ஜோதிமுல்லைவெகுகாட்சி யிளங்
தையலரேயிதைக் கொய்திடுவோம் பேஷாய் இதோ
தாகந்தீர்க்குந்த டாகநல்லுப
யோகமாயொரு பாகமுற்றது (திக)

பஞ்சவர்ணக்கிள்ளை கொஞ்சிக்குலாவுதடி
பாங்காகவண்டில்பேடை நீங்காதமர்ந்தமேடை மீது
பரிந்துகலவி புரிந்துலாவுதடி இங்கு
பந்திபந்தியான பலமரங்களில்
மந்திகள்தாவிடும் விந்தையைநோக்குவீர் (திக)

மஞ்சாருமயில் சஞ்சாரச்சோலை
வண்டாம்பூவின்மணமே கொண்டாடமேவுங்குணமே யென்ன
மாட்சியிதுகண் காட்சியாமேலே இனி
மாசிலாப்புக ழேசிறந்தச
தாசிவத்துரை பாசுரமுறை (திக)

வசனம்.—தோழிகாள்! இந்த நந்தவனத்தைப் பார்த்தீர்களா? என்ன சிங்காரமடி! மல்லிகை, முல்லை, யிருவாச்சி, பிச்சி ரோஜா, மருவு, பாரிஜாதம், சண்பகம், மனோரஞ்சிதம் தாழை, நந்தியாவட்டம், பவளமல்லி முதலிய பலவித மலர்கள் ஒருங்கே சேர்ந்து வீசுகின்றவாடையும் அதற்கிணங்கிய மணல் மேடையும் அதின்கண் பாய்ந்துசெல்லும் ஓடையும் பக்ஷிஜாதிகள் செய்கின்ற ஜாடையும் என்னவுல்லாசம்! என்மனதிற்கு உற்சாகத்தை மூட்டுகிறதடி! அதோபாருங்கள்! பலவிதமான விருக்ஷங்கள் எவ்வளவு செழிப்பாக வளர்ந்திருக்கின்றன?

சகி:— தேவி! மாமரங்களிற் கனிகள்பழுத்து கிளைக்குக்கிளை சரஞ் சரமாகத் தொங்குகின்றன.

சா:— ஆம்; இங்கு பார்த்தீர்களா! இதென்ன விபரீதம்! மயிலினங்களாடுவது எவ்வளவு நேர்த்தி! குயில்கள் பாடுவதைக் கேட்டீர்களா! செவிக்கின்பமாயிருக்கிறது.

சகி:— ஆம் தேவி! இந்தச்சோலையி லெங்குபார்த்தாலும் விசித்திர வேடிக்கையாகவே யிருக்கிறது.

[சத்தியவான் பாடுங்குரல் இனிமையாகக் கேட்கின்றது.]

சா:— அடீ சகிகாள்! என்ன விபரீதமடி! சற்று செவிசாய்த்துக் கேளுங்கள்! இனிமையான கானவோசை கேட்கவில்லையா?

சகி:— ஆம் அம்மா! ஆண் குரலாகவன்றோ இருக்கிறது! ஆஹா! எவ்வளவு இனிமை! எவ்வளவு இனிமை!! ஜன சஞ்சாரமில்லாத இச்சோலையின்கண் இவ்வினிமையான குரல் எங்கிருந்தம்மா உண்டாகிறது?

சா:— அதுதானடி ஆச்சரியமாயிருக்கிறது! (சுற்றிப்பார்த்துவிட்டு) ஓஹோ! அதோ பாருங்களடி! தென்புறத்து வாயிலின் அருகிலுள்ள மணல்மேடையில் யாரோ ஒரு மஹான் தன்னை மறந்து பாடுகின்றார்.

சகி:— ஆம் அம்மணி! இந்தக்குரல்தான் தென்றற்குதிரையின் மீதேறி வடபுறம் வெகுதூரம்வரை சவாரிசெய்கின்றது.

சா:— அடி! நீங்கள் எல்லோரும் வேடிக்கையாகப் பேசுகிறீர்கள். அதெல்லாமிருக்கட்டும். அவரின் சுந்தரத்தைப் பாருங்கடி! அவர் யார் தெரியுமா உங்களில் யாருக்கேனும்?

சகி:— ஒருவருக்கும் தெரியாது. ஆனால் ஓர் அரசகுமாரனாயிருக்குமென்று ஊகிப்பதற்கேற்றவாறு அவருடைய முகாரவிந்தம் பொருந்தியிருக்கின்றது. எவ்வளவு சுந்தரமாயிருந்தபோதிலும் அதைப்பற்றிப் பேசுவதற்கு நம்மிடம் என்ன சுதந்தரம் இருக்கின்றது?

சா:— இல்லைதான்; எதற்கும் தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டாமா? அவர் எவ்வூரரசகுமாரனாயிருக்கலாமென்று நினைக்கிறீர்கள்?

சகி:—எவ்வூரராயிருப்பினும் அதைப்பற்றிநமக்கென்னகவலை? இனி நாமிங்கிருப்பது தகுதியல்ல.

பாட்டு.

நீ வருந்தாதேயென்றமெட்டு

இராகம்-தேசிக்தோடி தாளம்-ஆதி

பல்லவி.

மதிமுகவதனி— வந்துசேரமர்குதே (மதி)

அநுபல்லவி

மனைநாடி வருவாயே இனிவேக மாகவே (மதி)

வசனம்:— தேவி! நாமிந்தச் சோலைக்கு வந்து வெகுநேரமாகிறது. இனியுந் தாமதிக்காமல் சீக்கிரம் வா! மனைக்குச் செல்வோம்.

சா:— பல்லவித்தொடர்

மலர்பறித்திடுவோம் மங்கைகாளிங்கிதமாய் (மலர்)

அநுபல்லவி

மந்தாரை முல்லைத குந்தப ரிமள (மலர்)

வசனம்:— சகிகாள்! சீக்கிரம் வருகவென்றழைக்கிறீர்களே; நாமெதற்காக இச்சோலையை நாடிவந்தோம்? மனதிற்கிசைந்த மலர்களைக் கொய்துகொள்ள வேண்டாமா? கருத்திறகிசைந்த கனிவர்க்கங்களைக் கைக்கொள்ள வேண்டாமா? இன்னும் எவ்வளவோ வேலைகளிருக்கின்றன. எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு சாவதானமாகச்செல்வோம்; ஏன் அவசரப்படுகிறீர்கள்?

சகி:— பல்லவித்தொடர்

உமதெண்ணப்படியே ஒய்யார மலர்கொய்குவோம்(உம)

அநுபல்லவி

உருசித்திடு பரிசுத்தசு கரசக்கனி பெருகக்கொடு(உம)

வசனம்:— அம்மணி! உன் மனம்போலவே நாற்புறங்களிலுஞ்சென்று மலர்களையும் கனிகளையும் சேகரித்துக்கொண்டு அதி சீக்கிரமாக வந்துவிடுகிறோம். ஆனல் உன்னைத் தனியாகவிட்டு நாமெப்படிச் செல்வது? ஒருகால் அதிக தூரத்திலும் செல்ல வேண்டியிருக்கும் நீயும் எங்களுடன் வந்துவிடுகிறாயா?

சா:— சகிகாள்! என்னைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். நான் இங்குதானே இருக்கிறேன். வேறெங்குஞ் செல்ல மாட்டேன். என்னாற் கூடியவரையில் இங்கிருக்கக்கூடிய புஷ்பங்களைக் கொய்கிறேன். நீங்கள் சீக்கிரமாகச் செல்லுங்கள்.

சகி:— சரி. அவ்விதமே நீ இங்கிருப்பவைகளைச் சேகரித்துக் கொள். ஆனல் நாம் வந்தவுடன் எங்களுடன் அரண்மனைக்கு வந்துவிடுவாயல்லவா?

சா:— இதேதடி உங்களுடைய பெரிய தொந்தரவாயிருக்கிறது. நான் உங்களுடன் அரண்மனைக்கு வராமல் வேறு எங்கு செல்லப் போகின்றேன்? என்னால் தாமத மொன்றுமில்லை; பொழுது போகின்றதென்று அவசரப்பட்ட நீங்களல்லவோ இப்பொழுது தாமதிக்கிறீர்கள்.

பல்லவித்தொடர்

செல்லுவீர் சகிகாள் சீக்கிரமாகவே (செல்)

அநுபல்லவி

சிந்தைக்கு கந்தபுட் பந்தனைக் கொய்யவே (செல்)

வசனம்:— இனியேனும் தாமதிக்காதபடி அதிசீக்கிரமாகச் சென்றுவாருங்கள்.

சகி:— இதோ செல்லுகின்றோம். ஒரே ஒரு சந்தேகந்தான் மனதைப் புண்படுத்துகிறது.

சா:— என்னடி அது. உங்களிலொவ்வொருவருக்கும் இருந் திருந்து ஒவ்வொரு சந்தேகம் ஜெனிக்குமோ?

சகி:— அப்படியல்ல அம்மா! நாம் சொல்வதைச் சற்று விபரமாகக் கேள். "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவ மென்ப திழுக்கு" என்னும் ஆன்றோர் அருமொழிக்கிணங்க, ஓர் காரியத்தைச் செய்யப் புகு முன்னர் அக்காரியத்தினாலேற்படும் நன்மைதீமைகளை நன்கறிய வேண்டிய தவசியமென்பது உனக்குத் தெரியாததல்ல. நீயோ யுவதி. மணம்புரிந்துகொள்ளத்தக்க பருவ மடைந்திருக்கிறாய். ஆடவர் கண்களுக் ககப்படக்கூடாதவள். அவ்விதமிருக்க உன்னைத் தனியாக விட்டுப்பிரிந்த சங்கதி மகாராணியார்க்குத் தெரிந்தால் எங்களைத் தண்டிப்பதல்லாமல் உன்னையுமன்றோ கோபிப்பார்கள்?

சா:— ஆம். நீங்கள் சொல்வதுண்மைதான். ஆயினும் எறும்பின் புற்றில் கையை வைத்தாலன்றோ அது நம்மைக் கடிக்கப் போகிறது? அதைப்போல இங்கு நடக்கும் விஷயங்களை நமது தாயாருக்குத் தெரிவித்தாலன்றோ நம்மைக் கோபிக்கப்போகிறார்கள்? அவ்வளவு தெரியாமல் நான் சொல்லுகிறேனென்று நினைக்கிறீர்கள்? வீண் கலவரங்கொள்ளாமல் சீக்கிரம் போய்வாருங்கள். அதிக நேரமாகிறது.

சகி:— வாஸ்தவந்தான். நாம் போய்வருகிறோம்.

சா:— சரி, சென்றுவாருங்கள்.

[சகிகள் செல்கின்றனர்.]

அங்கம் 3. 3-வது சீன்

நந்தவனம்.

சாவித்திரியுஞ் சத்தியவானும் சந்தித்தல்.

[நந்தவனத்தின் தென்புறத்து மணல்மேடையில்சத்தியவான் உட்கார்ந்து மிகவும் உல்லாசமாய்ப் பாடிக்கொண்டிருக்கிறான்.]

சிங்காரியே என்ற மெட்டு.

இராகம்-இ. பியாகு தாளம்-ஆதி

பல்லவி

கண்காட்சியே காணக்கிட் டாதமாட்சியே (கண்)

அநுபல்லவி

தண்டலையிதின் சிங்காரம்
சாற்றிடத்தகும் விஸ்தாரம் (கண்)

சரணம்

மல்லிகையு முல்லையிரு வாட்சிமிகு வாசமே
மருக்கொழுந் தொடுமந்த மாருதம்பிர காசமே
நல்லகுண பிச்சிரோஜா நாற்புறத்தி னும்வீசுமே
நந்தியாவட் டமிணைந்த கூட்டம் இங்கு
அந்திமல்லி கைச்சண்பக வீட்டம் எங்கும்
பந்திபந்தி யாயுற்றதே தேட்டம்
பங்கயத்த டாகம்
படித்துறைய நேகம்
தங்குவேனோர் பாகம்
சதாசிவ மயவுற் சாகம் (கண்)

வசனம்:—ஆஹா! இந்தப்பூஞ்சோலை எவ்வளவு அலங்காரமாயமைந்திருக்கிறது! மா, பலா, கதலி, கமுகு, மாதளை, கொய்யா,

விளா முதலிய பயன்தரு மரங்கள் எவ்வளவு வரிசையாய் நிற்கின்றன! மல்லிகை, முல்லை, இருவாட்சி, பன்னீர், பாரிஜாதம், சண்பகம், மனோரஞ்சிதம், ரோஜா, மந்தமாருதம் முதலிய புஷ்பச்செடிகள் எவ்வளவு ஒழுங்காக ஒரே உயரமாய்க் கண்ணிற் கெட்டாததூரம்வரை நாற்புறத்தும் நிறைந்திருக்கின்றன! அவைகளினின் றெழுகின்ற பரிமள கந்தம் மூக்கைத் துளைத்துக்கொண் டன்றோ உள்நுழைகின்றது! சலவைக்கல் மணல்மேடையும் சலசலவெனச் சப்திக்கும்ஓடையும் எனதுள்ளத்தைப்பரவசமுறுத்துகின்றனவே! இத்துணை மகத்துவம் பொருந்திய இவ்வனத்தின் மகிமையை முற்றுமெடுத்துரைக்கவென் னாலியலுமோ! இயலாது! இயலாது!! சுருங்கச் சொல்லின் இவ்வனத்தை யிங்கு ஸ்தாபித்த புண்ணியவாளரைக் காணின், என் தேகக் களைப்பை நீக்கிப் புகலொணாக் கடும்பசியைப் போக்கியதற்குக் கைம்மாறாக எனது உயிரையுங் கொடுப்பேன். ஆஹா! நான் மதியை மயங்கவன்றோ விட்டுவிட்டேன். குதிரைகளைக் குளிப்பாட்டச்சென்ற மாடவ்யனை இன்னுங்காணோம். காரணமேதோ தெரியவில்லை! நேரமோ அதிகமாய்விட்டது! ஊம். வந்துவிடுவான் சற்றுபொறுப்போம்.

[பாடுகிறான்.]

[வடபுறத்தில் சாவித்திரி பலவித புஷ்பங்களைக்கொய்துகொண்டே]

வசனம்:— ஆஹா! யானெவ்விதம் இப் பூங்காவனத்தினின்றும் வெளியேறுவேன்! மலர்களின் பலவித பரிமளம் குளிர்ந்த தென்றலிற் கலந்துவந்தென் னுட்புகுந்து சதாஎன்னைவிட்டகலாது என மனதைக் கொள்ளைகொள்கிறதே! என்னசுகம்! என்னசுகம்!! என்னை யறியாமலோர்வித புதுமாதிரியான வின்பமன்றோ எனதுளத்தைக் கிளர்கின்றது.

[திடீரெனப் புதரினின்றும் ஓர் சிங்கம் கர்ச்சித்துக்கொண்டே சாவித்திரியைத் துரத்துகிறது.]

(உரத்த குரலில்) ஆ! ஜெகதீசா! இதோ ஓர் சிங்கம், என்னை நாடிப் பாய்ந்துவருகிறதே! என்செய்வேன்!

[இச்சத்தம் சத்தியவான் காதில் விழுகின்றது.]

சத்:— (திகைத்தெழுந்து) ஐயோ! இதென்ன விபரீதம்! பெண்குரல்! மிகவும் பரிதாபமாகக் கேட்கிறதே!

[சத்தம் வந்த திக்கை நோக்குகின்றான்]

[சாவித்திரி ஓடிவந்து அடர்ந்தமரங்களினிடையே ஒளிகின்றாள், சிங்கம் விடாது டாய்ந்து வருகின்றது.]

ஐஸாபர்னே என்ற மெட்டு.

இராகம்-பியாகு தாளம்-ஆதி

ஓஹோஹோவொரு மாதைக்கொல்ல
ஓடிப்பாயுதே ஓர் சிங்கம்
ஆஹாஹாயிவ் வாளா லிக்கண
மதனைச் செய்திடு வேன்பங்கம்.

[ஓடிச்சென்று சிங்கத்தை ஒரே வீச்சில் இருதுண்டாக்கிவிட்டுத் திரும்புகிறான்.]

வசனம்:— யாரோ ஓர் யுவதியைக் கொல்ல வினைத்துத் துரத்திவந்த சிங்கத்தை நான்மாத்திரம் தனியாய்ச் சென்று கொன்றுவிட்டது எனக்கே மிகுந்த ஆச்சரியத்தைத் தருகின்றது. பேஷ்! எனக்கு அவ்வளவு பலம் எங்கிருந்து கிடைத்தது? பலமிருந்து யாது பயன்? தைரியமன்றோ காரணம்! நல்லவேளை தற்சமயம் நானிங்கு இருந்திராவிட்டால் பாவம்! அநியாயமாய் அந்தப் புண்ணியவதிக்குக் கெடுதி நேரிட்டிருக்கும். தெய்வச் செயலாய்க் காப்பாற்றப்பெற்றாள். ஆ! என்ன மயக்கம்! தலை சுழலுகிறதே!

[மேடையில் சயனிக்கிறான்.]

சா:— (மரக்கூட்டத்தினின்றும்வெளிவந்து) ஆ! தெய்வமே! உன் கருணையே கருணை. உன் திருவிளையாடல்களைப் புகழ்ந்து பேசுதற்கு என் மெல்லிய நா போதுமா! ஒருக்காலும்போதாது! ஐந்து நிமிடங்களுக்குள் என்னை ஆட்டி வைக்கும் ஆட்டத்தை ஆடிவிட்டாயே! நல்ல சமயம் பார்த்து ஓர் புமானைக்கொண்டுவந்து சேர்த்தாய்! அன்னவர்மாத்திரம் இச்சமயத்தில் என்னைக்கொல்ல வந்த கொடிய சிங்கத்தைக் கொன்றிராவிட்டால் என்பாடு ஆபத்

தாய் முடிந்திருக்கும். ஆ! அவரைக் காணவில்லையே! எங்கு சென்றார்? எனதுயிரைப் பாதுகாத்த இளஞ்செம்மலுக்கு யான் என்னதான் கைம்மாறு செய்வது? அவரைக்கண்டு என் மனமார்ந்த வந்தனத்தையாவது செலுத்தத்தவறுவேனாகில் என்னைப் போன்ற நன்றிமறந்த பாவிகளும் இருப்பரோ?

(நாற்புறமுஞ் சுற்றிப் பார்த்துவிட்டு) ஓ ஹோ! அதோ சயனித்திருக்கிறார். தனித்துநின்று சிங்கத்தைக் கொன்றதினால் களைப்புமேலிட்டதுபோலும்! நல்லது அருகிற் செல்வோம்.

[சத்தியவான் இருக்குமிடத்திற்கு வருகிறாள்.]

ஆ ஹா! என்ன அழகு!

கட்டளைக்கலித்துறை.

ஜெகராசி யென்ப பனிரண்டு மேவிச் சிறந்திலகு
மிகராசி யன்பிற் கினிதா யுகந்த விதுகலையார்
மூகராசி யன்ன வெனதுயிர் காத்த முடியணியு
மகராஜ னுகு மிவரே யெனதாசை மாப்பிள்ளையே.

காயநரி வாரிச்சலோ என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பார்வீ தாளம்-ஆதி

கண்ணிகள்

சோமனிவ னோமதனோ ஜோதிச் சந்த்ரனோ ரகு
ராமனோபூ மானோமகா ராஜ னிந்த்ரனோ
சுகித மாசிலா வகில பூஜித (சோ)

காமிகளுக் காமிவனே காதலொய்யாரன் இந்தக்
காசினிவளர் ராஜமகளிர் கருதுஞ் சிங்காரன்
கருணை யுடைய பெருமை யடையும் (சோ)

நாணப்பெண்கள்காணக்கண்கள் நாடும்யோகனே இவர்
கனியழகுவ தனவிகசித களின பாகனே
நாகரீ கமதி பூகவி வேகன் (சோ)

சானவிப்பெண்தானுறையத் தாங்குங்கண்ணியன் நாளுஞ்
சங்கரச தாசிவமயஞ் சார்ந்த புண்ணியன்
தனித்தவென்னுயிர் தனைக்காப்பாற்றிய (சோ)

வசனம்:— அந்தோ! நம்பொருட்டாகவன்றோ இவருக் கிம் மாதிரி களைப்புத் தோன்றியது. இன்னவரின் அழகைக் காணின் பாரதியும் தன் பாத்தாவின் படைத்தற் றொழிலைச் சிறப்பித்து நிற்பாள். இவரை எழுப்பி இவரின் விர்த்தாந்தங்களை யறிகிறேன்

[அருகிற் செல்கின்றாள்.]

கட்டளைக் கலித்துறை.

எத்தரை ராஜரும் போற்றிப் பணியு மிறையுனது
சித்திர ரூப தெரிசனை கண்டு திகைத்துநின்றேன்
பத்தினியாளென்முன் னோர்மொழியேனும் பகர்ந்திடாது
நித்திரை செய்கிற தென்னோ வறியேனிந் நேரத்திலே.

பட்சமிருக்கவேணும் என்ற மெட்டு.

பல்லவி

இன்னமு முனக்கென்ன தூக்கமோ நாதா
எழுந்தென்னு டன்பேசாத தேற்குமோ (இன்)

அநுபல்லவி

மன்னவ துரையே மாநிலத் திறையே
கன்னல்வில் மாரனின் கணையாலே மிகக்
காதல்கொண் டேனும்மே லெனையாள்வீர் (இன்)

சரணம்

இத்தனை மோடி யேனினிக் கூடி
நித்தியா னந்தமாய் விளையாடி யென்றும்
நேசமு டன்வாழ்வோ மகம்நாடி (இன)

பத்தினி யானென் பத்தா நீர்தானே
சத்திய மாய்ச்சொன்னேன் புவிமீது நாளும்
சதாசிவ னருளிது தவறாது (இன்)

வசனம்:— ஆஹா! என்ன களைப்பு! அயர்ந்து நித்திரை புரிகின்றார். யான் எவ்வளவோ சத்தமிட்டும் தெளியவில்லை. இவ்வாறாகிய களைப்பு என்னாலன்றோ உண்டாயிற்று. எனதுயிரைக் காப்பாற்றியஇவரையே எவ்விதத்திலாயினும்நாயகனாகக்கொண்டு மனம்போலச் சகல சுக சந்தோஷங்களையு மனுபவிக்கவேண்டும். ஆ! இவருடைய அந்தரங்கத்தை யின்னு மறியவில்லையே. இன்

ணவரை நித்திரையினின்றும் எழுப்பிவிட்டால் என்னைக்கண்டதும் சந்தோஷமாக வார்த்தையாடிவிட்டால்தான் இன்பம் பயக்கும். கோபக்குறியுடன் பேசிவிடுவாராயின் மிகுந்ததுன்பத்தையன்றோ அநுபவிக்க நேரிடும்? ஆசையென்பது அளவில்லாமல் நிறைந்திருக்கிறது. பெண்கள் எழுப்பப் புருடர் கோபிப்பதுமுண்டோ? இல்லை. இல்லை. எப்படிக்கோபிக்க மனம்வரும்? வராது. ஆனல். நான்மாத்திரம் வீணில் பேசிக்கொண்டிருப்பதில் யாது பயன்? இன்னவரின் நித்திரை தெளியப்போகிறதில்லை. கையினுல் இருமுறை தொட்டுத்தட்டியழைத்தால் உடனேவிழித்துக்கொள்வார். ஆ! என்னவென்றழைப்பது? ஏதாவது முறைவைத்துக்கொள்ளலாமா? அவ்விதம் வைத்தழைக்க வென்றாலும், அடிக்கடி

பங்காயிலாயே சரீரா என்றமெட்டு.

இராகம்-இ.பியாகு தாளம்-ஆதி

பல்லவி

வெட்கம் வந்து தடுக்குதே மிக்க மனதில் (வெ)

அநுபல்லவி

தக்கதே பருவம் சார்ந்தநல் லுருவம்
சொக்குதென் விழிசொருகி சொல்லவெனிலோ (வெ)

சரணம்

அந்தமிகுந்தமன்னன் அன்பிற்குகந்து நண்ணும்
அந்தரங்க மறிந்திட ஆனலு மென்னை(வெ)
நாணமடமச்சம் பயிற்பென நான்கும்
பேணிடாதேவிரும்பிட பெண்ணுளென்செய்வேன்(வெ)

வசனம்:— இவ்வாறு அடிக்கடி வெட்கமுற்றிருந்தா லென்னவாகும்? அழைக்கிறேன். (சத்தியவானைத்தட்டி) இராஜகுமாரர்! இராஜகுமாரா!!

[சத்தியவானின் தூக்கம் கலைகிறது]

சத்:— (சயனித்தபடியே) மாடவ்யா! ஏனிவ்வளவுதாமதம்?

[பதிலில்லை]

நண்ப! ஏன் பேசாதிருக்கிறாய்? விளையாடுகின்றாயா? எங்கு இருக்கின்றாய் தெரியவில்லையே!

சா:—யாரைத்தேடுகிறீர்கள்? நானன்றோ தங்களை எழுப்பினேன்?

[பெண்ணின் குரலைக்கேட்டதும்
திடுக்கிட்டெழுந்[illegible]]

தர்க்கம்.

எத்தாய் மயக்காதே என்றமெட்டு.

சத்:—பெண்ணே!

என்னை யெழுப்பியதேனோ நீய[illegible]?

சா:— சொன்னேன் மத்ராபுரி மன்னனரும் புத்ரி
என்னாமம் சாவித்ரி மன்னா நீகேள்

சத்:— நீ என்முன் தனித்து வந்ததேனோதான்?

சா:— இயம்பிடுவேனான்

சத்:— எடுத்துரைப்பாய்தான்

சா:— நான் இந்தப் பூங்காவனத்தை நாடினேன்

சத்:— நாடினால் (என்)

வசனம்

சத்:—மாதரசி! பூங்காவனத்தை நாடிவந்த நீ, உனது வேலையை முடித்துக்கொண்டு அரண்மனைக்குச் செல்லுவதைவிட்டு, அயர்ந்து நித்திரையிலிருந்த என்னை எழுப்பவேண்டிய காரணம் யாது? உனக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டிருக்கிறதா? உதவி வேண்டுமானால் சொல் இதோ தயாராகவிருக்கிறேன்.

சா:—கடவுள் கிருபையால் எனக்கு நேரிட்டிருந்த பிராணாபத்தைத் தங்கள் மூலமாகவே நிவர்த்தித்துக்கொண்டேன்.

சத்:—என்ன என்மூலமாகவா?

சா:— ஆம்; சற்று நிதானமாகக் கவனித்துப்பாருங்கள். கொஞ்சநேரத்திற்குமுன் தங்கள் கையால் ஒரு கொடிய மிருகம் கொல்லப்பட்டதல்லவா?

சத்:—ஓ ஹோ! சிங்கம் துரத்தி வந்தது உன்னைத்தானோ?

சா:—ஆம் அந்தப் பெயரைச்சொன்னாலும் என் தேகம் நடுங்குகின்றது நல்ல சமயத்தில் தாங்கள் என் உயிரைக்காப்பாற்றினீர்களாதலின் என்னாற் கூடியவரை ஏதேனுமொரு கைம்மாறு செய்ய உத்தேசித்துத்தான் இங்கடைந்தேன்.

சத்:—பேஷ்! நன்றாயிருக்கிறது. உன்னிடமிருந்து யாதொரு கைம்மாறையும் யான் எதிர்பார்க்கவில்லை; ஆயினும் நீமனமுவந்து செய்வதாய்ச் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளாதிருக்க நியாயமில்லை; என்ன கைம்மாறு செய்ய உத்தேசித்திருக்கிறாய்?

சா:—அரச குமாரராகிய தங்களுக்கு அரசகுமாரியாகிய யான்செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றுதானுண்டு. அது தங்களுக்கே தெரிந்திருக்கும் நான் சொல்லலாமெனில் என் மனம் ... ... (மௌனம் தலைகுனிகிறாள்)

சத்:— கெஜல்

மங்கையர் நாயகமானே மணமுனக் கானதோ தோணேன்
இங்கெனக் கெடுத்துரைப்பா யெழில்மிகு வதனத்தேனே

வசனம்—மதிமுகியே! உன் கருத்தை யறிந்துகொண்டேன். உனக்கு இதுவரை மணமாகவில்லையா? இதற்குமுன் வேறு யாரையேனும் விரும்பியதுண்டா? விபரமாகத்தெரிவி

சா:— கெஜல்

துங்கசா லவபுரியாள் துயுமத்சே னமாமன்னன்
இங்கிதக் குமரன் தன்னை இச்சித்தேன் (மணம்) இல்லையின்னும்

வசனம்:—சாலவபுரியை ஆள்கின்ற துயுமத்சேன மகாராஜரின் புத்திரர்மீது காதலுற்றிருந்தேன்; ஆயினும் விவாகம் நடைபெறவில்லை.

சத்:—நல்லது, அன்னவனின் பெயர் யாது தெரியுமா?

சா:—தெரியும்; யான் சொல்வதில்லை இப்பொழுது என் விருப்பமானது தங்கள்பேரில் திரும்பிவிட்டதால் என் கற்பிற்கழிவு ஏற்பட்டதே என்றவெண்ணந்தான் என்னை அடிக்கடி வருத்துகின்றது.

சத்:—கற்புக்கடலே! சிங்கத்தினின்றும் உன்னைக் காப்பாற்றிய தெய்வம் இது விஷயத்திலும் உனக்குத் துணையாயிருக்கிறார். உன் கற்பிற்கு யாதொரு அழிவும் ஏற்பட்டுவிடவில்லை

சா:—அவ்விதமாயின் தாங்கள் இன்னாரென்பதை முதலில் அறிய விரும்புகிறேன்.

தரு

நான் ஆதரித்த பெண்போல என்றமெட்டு

சத்:— நாயகியே சத்யவந்தன்
நானே கண்டாய்

சா:— நாடிய தெய்வந் தானேவந்தாற்போலாம்
நாதா நின்பாதம் நமஸ்காரமே

வசனம்

சத்:— நாயகி! நீ யாரை முன்னம் இச்சித்திருந்தனையோ அந்தச் சத்தியவான்தான் நான்.

சா:— நாதா! கும்பிடப்போகுந் தெய்வம் குறுக்கே வந்ததைப் போல் நான் கோரியபடியே என் முன் பிரசன்னமானீர்கள் நான் செய்த புண்ணியமே புண்ணியம் இனி எனது தாய்தந்தையர்க் கறிவித்து மணமுடித்துக்கொள்ளலாம் வாருங்கள்.

சத்:— எனதருமைக் கண்மணி! நான் அவசரமாய் எனது நகருக்குச் செல்லவென்று இவ்வழியாக வந்தேன் வந்தவிடத்தில் தற்செயலாய் நாமிருவரும் ஒருவர்க்கொருவர் எதிர்ப்பட்டு பரஸ்பரநேசங்கொண்டோம். இதெல்லாம் தெய்வச்செயலேயன்றி வேறல்ல. நான் எனது நகருக்குச்சென்று அதி சிக்கிரத்தில் இவடம் வந்து உன்னை மணந்துகொள்கிறேன் என்னுடன்வந்த எனது தோழன் மாடவ்யன் குதிரைகளைக் குளிப்பாட்டச் சென்றிருக்கிறான். சிக்கிரம் வந்துவிடுவான் நான் அவசியம் செல்லவேண்டுமாதலால் தடைபுரியாது விடையளிப்பாய்.

ஹர ஹர வடிவேலா என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் பியாகு தாளம்-ஆதி

பல்லவி

சா:— ஆசைக்கிசைந்த துரையே உமைப்பிரிய
அரிவையென்னலாகுமோ வகந்துணிய

அநுபல்லவி

சத்:— மாசற்ற ரத்தினமே வருந்திடாதே
வந்திடுவேன் விரைவாய் மணம்புரிய

சரணம் அரையடி

சா:— மங்கை யெனைமறவா திருமிறைமே

சத்:— அங்கமி ரண்டுமி ரொன்றெனவறிவாய்

சா:— மஞு ளனே மனம்வாடினேன்

செஜஸ்

சத்:— மயிலேநின்மனம்வாடமன்னன்யான்சகிப்பேனே

பாட்டு

சா:— மற்றேது மினியான் கோரேன்

சத்:— சத்திய மிது தவறேன்

வசனம்

சா:— பிராணபதி! தாங்கள் புகன்ற மொழிகளைக்கேட்டு என் மனம் பரதவிக்கின்றது. இனி எவ்விதம் தங்களைவிட்டுப் பிரிந்திருப்பேன்?

சத்:— காதலி! என் கவலைப்படுகின்றாய்? கிணற்றுநீரை வெள்ளங்கொண்டுபோய்விடாது. வருந்தவேண்டாம்; சீக்கிரம் வந்துவிடுகிறேன்.

சா:— நாதா! சரி. தயவுசெய்து எனக்கு ஒரு வரமளிக்க வேண்டும்.

சத்:— நாயகி! ஒன்றுமாத்திரமல்ல. எத்தனை வேண்டுமாயினுங் கேள்.

சா:— கேட்கும் வரத்தைக் கொடுக்கத் தடையில்லையே?

சத்:— அதென்ன அப்படிக் கேட்கின்றாய்? என்னால் முடியக்கூடியவைகளாயின் கொடுப்பதற்குத் தடையுமுண்டோ?

சா:— இராதுதான். ஆனால் தங்களால் முடியக்கூடாத ஒன்றைச் செய்யுமாறு கேட்பேனென்று நினைக்கிறீர்கள்?

சத்:— அவ்விதமில்லை. இருந்தாலும் நீகேட்பதின்னதென விளக்கச்சொல்; பார்ப்போம்.

சா:— நானின்று தங்களுக்கு அர்ப்பணமாகினேன். இனி வேறொருவரைக் கருதேனென்பது தங்கட்கே தெரியும். மணந்தால் தங்களை மணப்பேன். இன்றேல் மடிவேன். நான் எவ்வி

தம் பதிவிரதா தர்மத்தில் ஈடுபட்டிருக்கிறேனோ அவ்விதமே தாங்களும் ஏகபத்தினி விரதத்தில் ஈடுபட்டு என்னையல்லாமல் வேறு ஸ்திரீயைக் கோரக்கூடாதென்பதே நான் கேட்டுக்கொள்வது.

சத்:— அம்மம்ம! இதற்குத்தானா இவ்வளவுதூரம்? சரி; அவ்வாறே தந்தேன். நீ அரண்மனைக்குச் செல். நேரமாகிறது. மாடவ்யன் வந்துவிடுவான்.

தக்கதக்கதேக்கோ என்ற மெட்டு.

சா:— பல்லவி

இந்தச்-சத்தியம றக்கவேண் டாம்துரையே-சொன்ன (சத்)

அநுபல்லவி

கேளும்—சத்தியவங் தரேபெண்சா
வித்திரிசொங் தமென்றோதுங் (சத்)

சத்:— பல்லவி

பத்தினியுனைமற வேன்பாவையே—அடி (பத்)

அநுபல்லவி

பைங்கிளியே கொஞ்சவேனை
யங்கிருந்து டன்வருவேன் (பத்)

சரணம்

சா:— பத்தினியும் நானே பத்தாவும்நீ ரானீர்
பட்சமிகுங் அச்சிதமா யிச்சமயம் நிச்சயித்த (சத்)

சத்:— உத்தமி யேமானே உளுகிடாதேவீணே
உத்தரவளித்திடுநா னெத்ததியுஞ்சத்தியமாய்ப் (பத்)

வசனம்

சத்:— என் கருத்திற் கிசைந்தகண்ணே! யான் எனது நகருக்குச் சென்றுவருமளவும் கவலையுறாதிரு. சீக்கிரம் சென்று வருகிறேன்.

சா:— கண்ணாளா! தாங்கள் சொல்வதெல்லாம் சரி. தங்களைவிட்டுப் பிரிய என் மனம் சமாதானப்படவில்லை. ஆதலால் அடியாளாகிய வென்மீது

குயிலே எந்தன் மீதில் என்ற மெட்டு

பல்லவி.

பட்சமிருக்க வேண்டுமென் ப்ராணநாதா (பட்)

அநுபல்லவி.

கச்சணிமடவார் கயல்விழிவலையால்
கலங்கியென்னை யேமறவாதீர் நீதா (பட்)

சத்:— பல்லவி.

நிச்சயமற வேணுமுந்தனேசம் (நிச்)

அநுபல்லவி.

இச்சையில் கூடி இன்பங்கொண்டாடி
இசைந்துவரு வேணினியுனை நாடி (நிச்)

சா:— கொஜல் விருத்தம்.

வருந்து மென்பாவினி வருகிதே னென்றுளந்
திருந்தி யியம்பினீர் செப்புவே னடியாள்
பொருந்திய நேசமும் புதுமண வார்த்தையும்
பிரிந்திட லெண்ணியே பெரிதும் வருத்துதையோ.

சத்:— ஷை

காதலி நின்மனங் கலங்கிடத் தகுமோ
ஓதினே னன்புறு முண்மை யீதாகும்
தீதிலா தென்னகர் சென்று வருகிறேன்
நீதிடமாய் விடை நேரளித் தனுப்புவாயே.

சரணம்.

சா:— பொற்புறுதோளா போர்தகுணாளா
புளகிதம நேகரவென் கண்ணாளா (பட்)

சத்:— கற்புயராணி கலங்கிடாதே நீ
கவலைபற வேவருவேன் கல்யாணி (சத்)

வசனம்.

கண்மணி! வீணில் கலங்கவேண்டாம். மணிபுரம் சென்றிருந்த என்னை, என் தந்தை அதிசீக்கிரம் மதராஸ்புரிக்கு அனுப்பச் சொல்லியதாக எனக்குச் செய்தி கிடைத்திருப்பதால் இனிக்

கொஞ்சமேனும் தாமதிக்காமற் செல்லவேண்டும் தடையில்லா மல் வீட்டைகொடு கூடிய சீக்கிரம் இங்கு வந்து உன்னை மணந்து கொள்ளுகிறேன். [மாடவ்யன் வருகிறான்] ஆ! அதோ மாடவ்யன் வருகிறான். அதிக நேரமாகிவிட்டது. நீ சீக்கிரம் அரண்மனைக்குச் செல். நான் சென்று வருகிறேன்.

சாவி:— பிராணபதி! மறந்துவிடாமற் சென்று வாருங்கள்

[சாவித்திரி பிரியாமனத்தோடு செல்லுகின்றாள். மாடவ்யன்வந்து சேருகிறான்.]

அங்கம் 3. 4-வது சீன்.

அடவி வழி.

சத்தியவானும் மாடவ்யனும் ஊர் செல்லுதல்.

[சத்தியவான்முன் வந்து நின்று மிகவும் க்ளேத்தவன்போல் பாசாங்கு செய்து]

மாட:— தேரி மோரி ஜோடி என்ற மெட்டு.

இராகம்:-செஞ்சுருட்டி தாளம்:-ஆதி.

பல்லவி.

தேடித்தேடிக் கால்க ளிரண்டாச்சுதே எந்தன்
தேக மொன்றுப்போச்சுதே உம்மைத்(தே)

அநுபல்லவி.

ஓடித்திரிந்தேனங் குலைமூன்று கண்ணை
மூடிக்கடந்தேனே ரடிநான்கு மரத்
தூடுஞ்சென்றேன்கஜமைமந்து போலசறு பர்
லாங்கேழு மைலெட்டு பின்னிட்டு
உம்மைக்கண் டோடிவந் தேனிங்கிட்டு போதும்
ஊருக்கு வண்டிகட்டு மும்மைத்(தே)

வசனம்.

இளவரசே! இதுவரை எங்கு சென்றிருந்தீர்? உம்மைத் தேடித்தேடி என் கால்கள் இரண்டாகி விட்டனவே!

சத்:— சபாஷ்! எல்லாருக்கும் உள்ளதைப்போல்தானே இதில் என்ன பிரமாதம்?

மா:— ஏன் சொல்லமாட்டீர்? என்னைப்போல் நீரும் 8-மைல் 7-பர்லாங்கு 6-போல் 5-கெஜம் 4-அடி 3-அங்குலம் வரை மரங்களினிடையிலும் கல்லிலும் முள்ளிலுமாக ஓடியிரு தாலன்றோ அந்தக் கஷ்டம் உமக்குத் தெரியும்?

சத்:— ஏதேதோ அளவெல்லாம் இம்மி பிசகாமற் சொல்லுகிறாயே! கையில் டேப்பு வைத்திருந்தாயோ? அதுசரி; எதற்காக சிரமப்பட்டாய்?

மா:— எதற்காகவா? குதிரைகளைக் குளிப்பாட்டிவிட்டு நீர் முன்னிருந்தவிடத்திற்கு வந்தேன்; உம்மைக் காணவில்லை; உடனே நீர் இல்லாதவிடங்களிலெல்லாம் தேடிப்பார்த்தன்றோ இங்கு வந்தேன்.

சத்:— இவ்வளவு தானே? நான் செய்திருக்கும் வேலையில் ஆயிரத்தில் ஒருபங்கிற் கோகுமா இது?

மா:— அதென்ன அவ்வளவு பிரமாதமான வேலை?

சத்:— இவ்வனத்தின் வழியாய் ஒரு சிங்கம் வந்தது அதை எதிர்த்துச்சென்று போராடிக் கடைசியில் கொன்றேவிட்டேன்.

மா:— ஓஹோ! அப்படியா? சிங்கம் சிறியதா பெரியதா ஆணா அல்லது பெண்ணா?

சத்:— சிங்கம் பெரியதுதான். ஆணோ பெண்ணோ கவனிக்கவில்லை.

மா:— கவனிக்காமலா இதுவரை போராடினீர்? பெண்சிங்கமாகத்தானிருக்கும்.

சத்:— அதெப்படி உனக்குத் தெரியும்?

மா:— பெண் சிங்கமானதினால்தான் உம்மிடத்திற் சிக்கிக் கொண்டது ஆணாயிருந்தால் உம்மிடம் சிக்குமா? ஒருகாலும் சிக்காது; ஆனாலும் அந்தச் சிங்கம் அசிங்கம்தானே?

சத்:— மாடவ்யா! என்ன? அசிங்கமா?

மா:— அல்ல அல்ல; ஆடையாபரண மிட்டது; பசுந்துதான்,

சத்:— உனக்கு எப்பொழுதும் விளையாட்டே பெரிதாயிருக்கிறது.

மா:— இல்லை இல்லை; கோபம் வேண்டாம். சிங்கத்தை நீர்தானே ஜெயித்தீர்? அல்லது அது உம்மை ஜெயித்துவிட்டதோ?

சத்:— என்ன நீ கேட்கிற கேள்வி? பரிகாசமா பண்ணுகிறாய்?

மா:— நீர் செய்வதல்லவோ பரிகாசம்? உழக்கினுள் கிழக்கு மேற்கு காட்டுகிறீர்.

சத்:— (தனக்குள்) ஓகோ! இவன் தெரிந்துகொண்டான் போலும் (பகிரங்கமாக) மாடவ்யா! ஓர் பெண்ணரசியை ஒரு சிங்கம் துரத்தியது. நான் அதைக்கண்டு ஓடோடியுஞ் சென்று கொன்று அப்பெண்மணியைக் காப்பாற்றினேன்.

மா:— அப்படியா? பரோபகாரந்தான். நான் இங்கு வந்தபோது இரண்டு நரசிங்கங்கள் ஒன்றுக்கொன்று பிரிய மனமில்லாமற் போராடிக்கொண்டிருந்தன. அசிங்கம்!

சத்:— சரி சரி; விளையாடாதே, வா.

[செல்கிறார்கள்]

அங்கம் 4. 1-வது சீன்.

கானகம்.

துயுமத்ஸேனனும் பத்மாட்சியும் புலம்பல்.

துயு:— விருத்தம்.

பதியிழந் தரசநீதிப் பவுசிழந் தரியசெம்பொ
னிதியிழந் தெனதுகாத னேரிழை யுடனுமிந்தக்
கதியினுக் காகியெங்கள் கண்களு மிழந்துவாட
விதியவ னமைப்பேபாமுன்செய் வினைப்பய னீதுதானே.

சேந்தில் வேலனே என்ற மெட்டு.

பல்லவி.

என்னகாலமோ ஈசனே
இவ்விதிக்காளானோம் (என்)

அநுபல்லவி.

முன்னம்செய்வினையோ மூண்டதிந்தநாளில்
நன்னகருடனே நயனமிழந்தலைய (என்)

பல்லவி.

பத்:— என்னசெய்குவோம் தெய்வமே
இனிஎங்குய்குவோம் (என்)

அநுபல்லவி.

மன்னுநன்னகரை மாற்றான்கைக்கொள்ள
அன்னவாகனத்தோ னமைத்தனனோவறியோம் (என்)

துயு:— என்னருமைப்பால னிங்கில்லாதவேளை
அங்கியன்படைகொண் டரசைக்கவர்ந்துகொண்ட (தென்)

பத்:— மன்னரும்வருந்த வனந்திலுகந்தோம்
உன்னருளிதுவோ உமையாளோர்பாகனேநா (என்)

வசனம்.

பிராணபதி! நமது பாலன் சத்தியவானை இன்னமுங் காண வில்லையே! ஒரு வேளை அவன் வரவையறிந்து இச்சண்டாள கஜ கேது ஏதேனும் தொந்தரை செய்து விட்டானோ என்னமோ தெரியவில்லையே!

துயு:— பெண்ணே! அப்படி யாதொரு தீங்கும் நேரிட்டு விடாது. அதுவுமின்றி நமது புத்திரனை எதிர்த்து ஜெயங்கொள்ள கஜகேதுவினால் முடியாது. கூடிய சீக்கிரம் வந்து விடுவான். [உரத்த குரலில்] அந்தோ! தெய்வமே! எம்மைச் சகிக்கொணுத் தண்டனைக்குளாக்கினையே; என் செய்வோம்? ஜெகதீசா!

[சத்தியவானும் மாடவ்யனும்வருகிறார்கள். புலம்பும் குரல் கேட்கின்றது.]

சத்:— ஓஹோ! இதென்ன பரிதாபமாகிய சப்தங்கேட்கிறது? என் தந்தையின் குரல் போலிருக்கிறதே! என்ன ஆச்சரியம்!

[தாய் தந்தையரைக் காண்கிறான். கீழே விழுகிறான்]

ஹா! தெய்வமே!

ஒருமயிருதிர்ந்தாலும் என்ற மெட்டு.

கண்ணிகள்.

ஐயையோ தந்தையே அரசையிழந்துகாட்டில்
அகதிபோலலைவதேன் அறியேன் அறியேன் அறியேன்
மெய்யும்பதறவுங்கள் விழிகளையுங்கொய்து
விடுத்ததெவரோதோணேன் சிறியேன் சிறியேன் சிறியேன்
பாவியாகியவென்னைப் பயின்றபலனிதுவோ
பாதவித்திடலானீர் தந்தாய் தந்தாய் தந்தாய்
பூவிலாசாட்சி புரிந்துமகிழ்ந்ததும்போய்
புலம்பித்தவிக்கலானீர் எந்தாய் எந்தாய் எந்தாய்

[எழுந்து நிற்கிறான்.]

வசனம்.

ஆ! தாய்தந்தையரே! இதென்ன கொடுமை? எவராலிக்கோலமானீர்கள்? ஐயோ! சண்டாளனாகிய என்னைப் பெற்றெடுத்த தாங்கள் இவ்விதத் துன்பமுறவும் இரு பாழுங்கண்களால் நான் தங்களைச் சதாபார்த்துக் கொண்டிருக்கவும் நேர்ந்ததே! இம்மாதிரி சஞ்சலமடைவதற்கு நாம் என்ன பாவத்தைச் செய்தோம்? அல்லது எவரிடத்திற் சாபம் பெற்றோம்? ஐயோ! என் மனம் பதைக்கிறதே! வயிறு பற்றி எரிகிறதே! என்னை யீன்ற அன்னையே! இப்படியும் நம்மைத் தெய்வம் சோதிக்குமோ? தந்தையே! இராஜ்ஜிய பரிபாலனஞ்செய்து மகிழ்வாயிருந்த தாங்கள், நான் மணிபுரஞ்சென்று வருவதற்குள்ளாக இராஜ்ஜியத்தையிழந்து கண்களையும் பறிகொடுத்து இவ்விருளோரங்கிய கானகத்தில் கற்களும் முட்களுங்குத்த பூமியைக் காலால் தடவிக்கொண்டு வருந்தித்திரியவும் அன்ன ஆகாரமில்லாது காய்கனிகளைப் புசிக்கவும் நேர்ந்ததைப்பார்த்து யானெவ்விதஞ் சகித்திருப்பேன்?

மா:—இளவரசே! ஏன் வீணில் துயரப்படுகிறீர்? நடந்த விஷயத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருப்பதில் யாது பிரயோஜ இனி நடக்கவேண்டியதையன்றோ கவனிக்கவேண்டும்.

[சற்றுயோசிக்கிறன் சத்தியவான்]

சத்:—மாடப்பா!

அமுதமுதேக்கோ என்ற மெட்டு

பல்லவி

தனையனிருக்கத் தந்தை
தாயேங்கலாமோ (தனை)

அநுபல்லவி.

தாயேங்கலாமோ தந்தை
தாயேங்கலாமோ (தனை)

சரணம்

வினைப்பயனே தலை விதிவசந்தானே
வனத்திலுகந்து தந்தை தாயேங்கலாமோ (தனை)
நண்ணிச்செங்கோலோச்சும் ராஜரீகமிழந்து
கண்ணுமிழந்து தந்தை தாயேங்கலாமோ (தனை)
ஆவிபதறுதே ஐயோவென்செய்வேன்
பாவியான் பார்க்கத்தந்தை தாயேங்கலாமோ (தனை)

வசனம்

நண்பா! "மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்" என்பது முதுமொழி அவ்விதமிருக்க அதற்கு நேர்விரோதமாக என்னைக் கண்டவர்கள் பரிகாசம் பண்ணும்படியாகவன்றோ நானிருந்து வருகிறேன்!

மா:—அதற்கென்செய்வது? உமக்குத் தெரியாமல் நடந்த காரியத்திற்கு நீர் என்னசெய்வீர்? வீணில் இதைப்பற்றி அடிக்கடி வருந்திப் பிரயோஜன மென்ன? இனி ஆகவேண்டியவைகளைக் கவனியும்.

சத்:—[தந்தையைநோக்கி]

விருத்தம்

எந்தனை யீன்றவுங்கட் கிவ்விதத் தீங்கினைச்செய்
திந்தமா வனத்திற்சேர விசைத்தவ னெவனோகூறீர்
மைந்தனான கணமேசென்றம் மாபாவி யவனைக்கொன்று
தந்தையே வருவேனிங்கு தடையிலா விடையீவீரே.

தங்கைமே தங்கையேவுன்றன் என்றமெட்டு.

பல்லவி.

தந்தையே தந்தைதாயுங்கட் கிந்தவிதமாகப்பெருந்
தொந்தரை யளித்தவனெவன்—சறறேயவ்விப
ரந்தனை யுரைத்திடுமிவண்

அநுபல்லவி

அந்தரவிந்திரன்முத லெந்தவுலகோருனுமெ
அடித்துத் துடிக்கக்கையாற்
பிடித்துப் புடைத்துவாறேன் (தந்)

வசனம்.

பிதா! தங்கட்கு இவ்விதம தொந்தரவைக் கொடுத்த சண்டாள னின்னானென்ன உடனே தெரிவித்தால்

பல்லவித் தொடர்

திக்கெட்டுந் திடுக்கிடப்ப டைக்கட்டும்ப தைக்கவெங்க
ணைக்கெட்டும்ப டிக்கெதிரியை—எதிர்த்ததிஜெ
யக்கொட்டுமு ழக்கச்சரியே

அநுபல்லவி

தக்கமாபலத்தொடு சதாசிவனருளுமுண்டு
தருணம் வருவேன்விடை
தருவீர் விரைவிலெந்தன் (தந்)

வசனம்.

தந்தாய்! ஏன் ஒன்றும் பேசாதிருக்கிறீர்கள்? என்மீது கோபமா அல்லது பிள்ளையிருந்தும் பெருந்துயர்க்காளானோமே என்னு மனவருத்தமா! அவ்விதம் என்பேரில் கோபமாவது வருத்தமாவது கொள்வதற்கு என்ன காரணமிருக்கிறது? நான் தங்களுடனிருந்திருந்து இவ்விதம் நேர்ந்ததல்லவே! இப்போதுதானெ

ன்ன! எதிரி இன்னுனென்று உடனே தெரிவியுங்கள் இதோ சென்று பழிக்குப்பழிவாங்குவதல்லாமல் நம்மிராஜ்ஜியத்தையும் கைப்பற்றி வருகிறேன். என்பேரில் என்ன குற்றமிருந்தபோதிலும் மன்னித்துக்கொண்டு உடனே சொல்லுங்கள்:

துயு:— என்ன செய்வேனப்பா என்ற மெட்டு.

இராகம்:—நாதநாமக்கிரியை தாளம்-ஆதி

கண்ணிகள்.

என்னருமைச்சேயா ஏதுரைப்பேனப்பா
இவ்விதிக்காளாகினேம் இனியென்செய்வோம்
இவ்விதிக்காளாகினேம்

முன்னம்நாம்செய்வினையோ மூண்டதிங்காளிலேயோ
மூவரின் சோதனையோ யானறிந்திலேன்
மூவரின் சோதனையோ

பாவிகஜகேது படையெடுத்தெம்மீது
மேவியதாற்றுன்பமே மேலிட்டதப்பா
மேவியதாற்றுன்பமே

நாட்டைக்கவர்ந்தெங்கள் நயனங்களைக்கொய்து
காட்டினிலோட்டிவிட்டான் கண்மணிகேளாய்
காட்டினிலோட்டிவிட்டான்

வசனம்

கண்மணி! கலிங்கதேசத் தரசன் கஜகேது நம்மீது படையெடுத்துவந்து மூற்றுகைபோட்டு அரசைக்கைக்கொண்டு நம்மிருவர் கண்களையுங் கொய்து இக்கானிலோட்டிவிட்டான்

சத்:—அடடா! இந்த அற்பப்பயல்தானு?

சரசகுணவிகிதந்தாராயோ என்ற மெட்டு.

பல்லவி

விடுவேனே விமதனவனையினி (விடு)

அநுபல்லவி

விளைத்திடும்போர்க் களத்திலும்பேர்
தழைக்கவம்பாற் றுளைத்திடாதவனை (விடு)

சரணம்

கெடுமதியுடையவ னேகஜகேது
க்ரீடஆட்சிசெய்கெம் பீரத்தின்பாது
படைபொடிபடச்சின்னப் படுத்தியிப்போது
படிக்கு ளினியஜெயக்
கொடிக்கம் பமுமியற்றி
நொடிக்கு ளிசைந்தபேரி
யடிக்கச் செய்திடாதினி (விடு)

வசனம்

பிதா! சதாசிவமாய் விளங்காநின்ற சாட்சாத் பரம்பொருளைச் சதாதுதித்து நீதிவழுவா தரசாட்சிசெய்துவந்த தங்களை இக்கொடுமைக் காளாக்கிய இந்த அற்பப்பயலை இனி அரைக்கணமும் இவ்வுலகில் தங்கவிடேன் இதோ அவனையும் அவன் சேனைகளையும் நிர்மூலப்படுத்திவருகிறேன் சீக்கிரம் விடைகொடுங்கள்.

துயு:—வத்ஸா! அவசரப்படாதே! 'பொறுத்தா ரரசாள்வா' ரல்லவா? அன்றியும் 'ஒறுத்தார்க்கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புக' ழுண்டென்பதை எக்காலும் நினை. தவிர அவனைத்தான் தூஷிப்பதற் கென்ன காரணமுண்டு? 'தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பா' ரென்பதற்கேற்ப நடந்துவிட்டதன்றி வேறல்ல இவையெல்லாம்

சுஜன ஜீவனு என்ற மெட்டு.

பல்லவி

சிவன் செயலன்றோ மிகச்
சினமுமனன்றோ ஆதி (சிவ)

அநுபல்லவி

அவன் செயலன்றி அணு
வசைவதுமுண்டோ தா
னறிந்திடாதில்லை சிறந்தவென்சொல்லை
மறந்திடனெறியோ ஆதி (சிவ)

சரணம்

விதனமேன்விடு அவனவன்செய்த
வினைப்படி யீது நாம்
விரும்புவதாலென் னயனமைத்திட்ட
விதியுமா ருது
சதமல்லவாழ்வும தாழ்வுஞ்
சகடக்கால்போலாம் என்
தனையனேயெங்கட் கினியுனையலா
லெனகனிபொருள் ஆதி (சிவ)

வசனம்

குழந்தாய்! சகலமுமறிந்த உனக்கு நான் சொல்லவேண்டிய தொன்றுமில்லை, மாற்றானோடு போரிடுதற்குத் தக்கசமயமிதல்ல கூடிய சீக்கிரம் சமயம் வாய்க்கும். அப்போது நானே உன்னைப் போருக்கனுப்புகிறேன். கோபந்தணி. 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'

சத்:—தந்தாய்! தாங்களிவ்வளவு தூரம்வற்புறுத்தும்போது யான் என்ன செய்யப்போகின்றேன்? இருக்கட்டும்; அந்த கஜகேதுக்குக் கொஞ்சம் நல்லகாலம் போலிருக்கிறது ஆகட்டும் பின்னால் பார்த்துக்கொள்கிறேன்.

துயு:—
பத்:— } அப்பா குழந்தாய்! நீ எங்களுக்கோர் உறுதிவாக்களிக்கவேண்டும்.

சத்:—யாது காரணம்? சிறியோனிடமிருந்து என்னவாக்கைப் பெறப்போகிறீகள்?

பத்:—நாங்கள் தற்சமயம் இருக்கும் நிலைமைக்கு உன்னைத் தவிர வேறு கதியில்லை. ஆதலால் நீ எங்கும் செல்லலாகாது.

சத்:—அன்னையே! அவ்விதமே யாகட்டும்.

துயு:—மாடவ்யா! காலவித்தியாசத்தினால் நாம் இக்கோலத்துடன் காட்டில் வசிக்கிறோம். நீ நகருக்குச்சென்று மனைவிமக்களுடன் சுகமாக வாழ்ந்திரு.

மா:—ஐயோ கடவுளே! தாங்கள் இப்படி உத்தரவிடலாகுமா! "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பது தங்கட்குத் தெரியாததல்லவே சிறுவயது முதல் தங்கள் அன்னத்தைப் புசித்து வளர்ந்த நான் இச்சமயம் தங்களைவிட்டுப் பிரிந்துவிட்டால் என்னைப்போல விசுவாசங்கெட்டவன் வேறு யாரிருப்பான்? ஒரு கணமேனுந்தங்களை விட்டுப்பிரியமாட்டேன்.

துயு:—அப்பா! நீயே விசுவாசி. உனக்கொருபோதுங் குறைவில்லை. உன்னிஷ்டப்படி சத்தியவானுடனேயே இருந்துவா.

சத்:—பிதா! நான் சென்று தங்களுக்கான கனிவர்க்கங்களைக் கொண்டுவருகிறேன் விடை யளியுங்கள்.

துயு:—சரி, சாக்கிரதையாய்ச் சென்றுவா.

சத்:—மாடவ்யா! நீ இங்கேயேஇரு சீக்கிரம்வந்து விடுகிறேன்
[செல்கிறான் சத்தியவான்]

அங்கம்-5. 1-வது சீன்.

மத்ராபுரி கன்னிகாமடம்.

சாவித்திரி விரகவேதனை.

[மஞ்சத்தில் உட்கார்ந்திருந்து
எதையோ நினைத்தவள்போல்]

சா:— தரு

பஞ்சவர்ணக் கிளிகள்கொஞ்சி என்ற மெட்டு

கண்ணிகள்.

மன்னன்வரவுங்காணேன் மங்கையானென்செய்குவேனே
மா னே நா னே மையலானே (மன்

கன்னல்வில்லைவளைத்துக் காமன்கணைதொடுத்துக்
காரிழையென் மார்புருக மாறிமாறி வாரிதூவக்
கண் டே னின் றே கவலைகொண்டேன் (மன்)

அங்கம்பதறலாகுது அடிக்கடியென் மதியுமாறுது
ஐ யோ மை ய லாகுதடி (அங்)

கங்கணக்கைசோறுது கனிவாயிதழூறுது
கசிந்துல்லாசச்சதாசிவன்றமிழிசைந்து பேசிச்சதானந்தமுறக்
கருத் தி லிருத் துங் காரியத்தின் (மன்)

வசனம்

ஆஹா! சீக்கிரத்தில் வந்துவிடுவதா யெனக் குறுதியுரைத்துச் சென்ற மன்னவர் ஏனின்னும் வரவில்லை? ஒரு கால் ஊர் சென்றதும் தாய்தந்தையரிடத்திலுள்ள அன்பின் மிகுதியா லென்னை மறந்தனரோ? சீ! என்ன மடமை! என்னைத்தான் மறந்துவிடுவாரெனினும் எனக்குச் செய்துகொடுத்திருக்கும் சத்தியத்தையுமா மறந்து விடுவார்? அவ்விதமாயின் அவருக்கமைந்திருக்கும் பெயருக்கு என்ன சிறப்பிருக்கின்றது? மனமே! சற்றுப்பொறு இதோ வந்துவிடுவார். அவர் வராததாலன்றோ அமிர்தத்தையொத்த அன்னத்தையும் அருவருக்கின்றனே! நின் ஆத்திரத்தைக்கண்டு பித்தம் பிடித்துவிட்டதாக நினைத்தன்றோ பஞ்சபாணனும் பரிகாசமாகப் பரிமண மலர்வாளிகளைத்தூவி என் தேகத்தைத் துளைக்கின்றான்? ஆ! யானெவ்விதஞ் சகிப்பேன்!

தரு

லோகாரிசல்மியாஞ்சலோ என்ற மெட்டு

மதாயெனைவருத்தாதே துன்
மார்க்கமே பொருத்தாதே
சதாசிவன் திருக்காலே
தணலானுப் செறுக்காலே
சாடாதொருக்காலே
தானடைவாயிடர்மதத்தாலே
சாடாதொருக்காலே
அதஞ்செய்வேன் மதங்கொய்வேன்
இதேதகியுன் ஜம்பமே
அடா தடா கெடா தடா
அகன்றிடிலோ இன்பமே (மதா)

வசனம்

அட பாவி மன்மதா! நீ என்ன ஆண்பிள்ளைதானு? உலகத்தில் அணங்குகளுடன் ஆடவர்கள் போராடுவது இழிவென்றிருக்க நீ ஏன் அதைக்கவனியாது என்பேரில் சரமாரி பொழிகின்றனே? அதினும் நிராயுதபாணியாகிய என்னுடன் கரும்புச்சிலையையும் அரும்புக்கணைகளையுங் கையிலேந்திச் சமர்செய்வது யாரும் விரும்பத் தகாதசெய்தியன்றோ? இருப்பினும் நேரில் நின்று யுத்தம் புரிவையாயின் ஏதோ என்னால் இயன்றமட்டும் ஒரு கை பார்ப்பேன். அவ்வாறுமின்றி மறைந்திருந்தன்றோ சண்டையிடுகின்றாய்! ஆராயுங்கால் வெட்கம் மானமில்லாத முட்டாளாகவும், ஈவிரக்கமில்லாத கன்னெஞ்சனாகவுமன்றோ நீ இருக்கின்றாய்! தூ! விலகிப்போ.

[சோர்வுற்று மஞ்சத்திற் சாய்கின்றாள். இதுகாலும் ஒளிந்து நின்று கவனித்த சகிகளில் ஒருத்தி விரைந்து சென்று மகாராணியாருக்குத் தெரிவிக்கின்றாள் மற்றையோர் சாவித்திரியை உபசரிக் கின்றனர்.]

தரு

தோலினே ஜேஸின என்ற மெட்டு

பல்லவி

சகி:— வருவாய்தேவிநின் மாதேகமிக
வாட்டமதானதேன் வாகுடனுரைசெய் (வரு)

அநுபல்லவி

சா:— பரிகாசமிதோ பாவைகாளகல்வீர்
சகி:— பார்க்கவுமுகம்வேறு படுகுறிகாணுதே (வரு)

சரணம்.

சா:— உருவேயிதலா லுளதோகுறிகள்
ஊக்கமுடனென்முன்வா யுளறுவதேனோ
சகி:— திருவாய்திறந்தால் சிதறுதும்மொழியே
சா:— சிச்சீவுங்களுக்கென்ன சிரிப்புரையிதுவோ
சகி:— (வருவாய்)

வசனம்

சகி:—தேவி! என்ன முகவாட்டமுற்றிருக்கிறீர்கள்? உடம்பிற்கென்ன?

சா:—சகிகாள்! உடம்பிற்கு யாதொன்றுமில்லை. என் வீணில் கூச்சலிடுகிறீர்கள்?

சகி:—ஒன்று மில்லையெனில் இளஞ்சந்திரனையொத்த முகமும்செம்பவளத்தையொத்த இதழ்களும்கறுத்திருப்பதேன்? அன்றியும் தங்கள் வாய்மொழிகள் பதறிச் சிதறக் காரணமென்ன? சதாபிதற்றிக்கொண்டிருக்கும் நோக்கம் யாது? உண்மையைத் தெரிவியுங்களம்மா!

சா:—அடி! என் வாயில்வந்தவிதமெல்லாம் உளறுகின்றீர்கள்? என்மனமானது எங்கெங்கோ சஞ்சாரஞ் செய்கின்றது. இச்சமயம் என்னைத் தொந்தரை செய்யாதிருங்கள் போதும்.

சகி:—ஓஹோ! அன்று நந்தவனத்தில் பாடிக்கொண்டிருந்தாரே அவர் இருக்குமிடத்தை நோக்கிச் சஞ்சாரஞ் செய்கின்றதோ?

சா:—சீ! விளையாடாதீர்கள் இதென்ன துஷ்டத்தனம்! இனி இவ்விதஞ் சொன்னால் கோபம் வரும்

[மாலவி பிரவேசிக்கின்றாள்?]

[எழுந்து நின்று] அம்மா! நமஸ்கரிக்கின்றேன். உட்காருங்கள்

மா:—கண்ணே! இருக்கின்றேன். நீயு முட்காரு. சாப்பிட்டு விட்டாயா?

சா:— இன்னும் இல்லை.

மா:—ஏன்! இந்நேரம் வரை என்னசெய்துகொண்டிருந்தாய்

[சாவித்திரி மௌனம்]

சகி:—அம்மா! இவ்வளவு நேரம்வரை சாஹித்யம் நடத்தி இப்பொழுதுதான் நிறுத்தினார்கள்.

மா:—[சாவித்திரியைப்பார்த்து] அப்படியா? நான் நம்ப மாட்டேன்.

தரு

ஐயோ தெய்வமே இந்த என்ற மெட்டு

இராகம்:—சகானா தாளம்—ரூபகம்.

பல்லவி

மகளே உனதுமுகம் வாடியிருப்பதேனோ
மனக்குறையாதுரைசெய் மகிழ்வாயென தருமை (மக)

அநுபல்லவி

உகந்தபணிகளாடை உனக்கெதுதான்தேவை
தகுந்தபடிதருவேன் சாற்றிடுவாயம்மா (மக)
சகலசம்பத்துக்களுந் தனதாயிருக்கவின்ற
தாய்தந்தையகம் நோகத் தானேங்குவதழகோ (மக)
அன்னமுண்ணாமலே அயர்ந்திருப்பதேதற்கு
கன்னியுனனந்தரங்கங் கழறுவாயருந்தம (மக)

வசனம்

என் அருந்தவச்செல்வியே! ஏன் ஒருவாறு வாட்டமுற்றிருக்கிறாய்? உன் மனதில் என்ன நினைத்தனை? ஒளிக்காமல் கூறு

சா;—ஏனம்மா! நானெப்போதும்போல்தானே இருக்கிறேன் எதற்காக என் மனதில் எதையும் நினைக்கிறேன்?

சகி:...தேவி! தங்கள் புத்திரிக்குத் தக்க பருவம்வந்துற்றதால் மணாளனையடைந்து மருவும் எண்ணமுற்றனர்போலும்

சா:—அம்மா! எந்நேரமும் இவர்கள் இப்படியே பரிகாசஞ் செய்கிறார்கள் தாங்களாவது சற்று கண்டிக்கக் கூடாதா

மா:—கண்மணி! இது பரிகாசமாகுமா? நியாயமாகத்தானே பேசுகிறார்கள், ஈன்ற 'புத்திரிக்குப் பருவமுற்றகாலையில் தகுந்த புருடனைத்தேடி மணஞ்செய்துவைப்பது தாய் தந்தையர கடமையன்றோ? ஆதலால் உனக்குத் தகுந்த மணமகனென யாரையேனும் கருதியிருப்பையாயின அறிவி,

சகி:—தேவி! முன்னொருதினம் நாங்கள் நந்தவனஞ்சென்றிருந்தோம

சா;—சீ சும்மா இருங்கள்

மா:....நங்காய்! ஏன் கோபிக்கின்றனை! உன்னிடம் அவர்கள் வைத்திருக்கும் வாஞ்சையினால்தானே இவ்வளவு தூரம் உனக்காகப் பரிந்துபேசுகிறார்கள்

சகி:—ஏன் மறைத்துப்பேசவேண்டும்? மனதிலுள்ளதைத் தெரிவித்தால்தானே காரியம் நடக்கும்! வீணாக நினைத்துக்கொண்டிருப்பதில் யாது பிரயோசனம்? நாணமாயிருந்தால் நாம் சொல்லுகிறோமே! ஏன தடுக்கின்றீர்கள்?

மா:—குழந்தாய்! என்னிடங்கூறுவதில் உனக்கென்னநாணம் வேண்டாமம்மா சீக்கிரம் சொல நேரமாகிறது.

சா:— விருத்தம்

நன்னய முடனந்நாளில் நனிதவ மியற்றியன்பு
மன்னிய மரனைநோக்கி மகவரு ளெனனவேண்டி
என்னையு மீன்றுகாத்த எந்தைய ருடனன்பாரு
மன்னைநின்பாதம் போற்றியடிமையானறைகின்றேனே

பூவருந்திருவே என்ற மெட்டில் பின்வேறு.

பல்லவி

நடந்தசங்கதியே கேளும்
நவிலுவேன்ததியே அம்மா (நட)

அநுபல்லவி

சிறு நங்கையெனது எங்கவலுற
அங்கமெலிய பங்கமடைய (நட)

சரணம்

கடந்தசின்னாள்முன் படர்ந்தவெய்யோன்பின்
காவனந்தனைநாடி பலசேடி யுடன்கூடி விரைந்தோடி-மலர்க
காய்கனிகளைத்தேடி — பரித்
தேனனிவினையாடி — துணைக்
காரிகையரெல் லோரும்பிரிந்து
வேறிடங்கள்சென் றார்களதன்பின்

பல்லவித்தொடர்

தனித்து நின்றனளே — கையில்
கனித்திரளுடனே — அம்மா (தனி)

அநுபல்லவி

இளங் - தையலெனது மெய்சிலிர்த்தக
லையவினியென் செய்கிறதெனத் (தனி)

சரணம்

வனத்தினிற்றங்கும் கனத்த மெய்ச்சிங்கம்
வழிதனிலெனைப்பார்த்துவாயங்காத்துகுரலார்த்துவரவேர்த்து மட

மதிதயிரியம் நீத்து — தலை
விதியெனவெண்ணிக் காத்துக் — கொள

மரங்களிடையி லொதுங்கி மிகவு
நடுங்கிவிரைவிற் பதுங்கிப்புழுங்கி

பல்லவித்தொடர்

அழுதுவெய்துயிர்த்தேன் — கேட்டு
ஆரோவோர்மகான் — நான் (அழு)

அநுபல்லவி

ஓடி - அங்குவந்துகட் கங்கொடப்பெருஞ்
சிங்கமதனைப் பங்கஞ்செய்தனர் (அழு)

சரணம்

பழுதின்றித் தன்னைப் பாராமலென்னைப்
பாதுகாத்தவீரன் வெகுதீரன் உபகாரன் 'சுகுமாரன்-தனைப்

பார்த்துநல்லுபசாரம் - மனப்
பூர்த்தியொடுமந்நேரம் - சொலிப்

பரிந்தெனை மணம் புரிந்துகொள்ளெனப்
பொருந்திமனைக்கு வருந்தியழைத்தும்

பல்லவித்தொடர்

வருகிறேனென்றார் — மணம்
புரிகிறேனென்றார் — ஊர்போய் (வரு)

அநுபல்லவி

மிதா - வானதுயுமத் சேனனிடமெல்
லாஙிகழ்ச்சியுந் தானறைந்திவண் (வரு)

சரணம்

பொருகிய வாக்யர் பிசகாதயோக்யர்
பிரிந்தினம்வரகானேன்கதிதோனேன்பணிபூனேன்தனியானேன்பெரும்

பேதைமன்மதன்வீணே — செயும்
வாதைமிக்குறலானேன் — இனிப்

பேசருவிசு வாசந்தைச
தாசிவனரு ளேசதமுனம்

பல்லவித்தொடர்

நடந்த சங்கதியே — யாவும்
நவின்றனன்ததியே—அம்மா (நட)

வசனம்

அம்மா! நடந்த சங்கதிகள் யாவையும் ஒன்றும் விடாமல் சொல்லிவிட்டேன் வேறு விசேஷமொன்றுமில்லை.

மா:—சாவித்திரி! உனது குறிப்பையுணர்ந்தேன். 'பிதா வான தயுமத்சேனனிடம்' என்றுசொன்னயே முன்பொருதரம் நாம்பேசிக்கொண்டோமே சாலவபுரி ... ...

சா:—ஆம்! அவர்தானம்மா!

மா:—அவரே எப்படிவந்து சேர்ந்தார்?

சா:—தெய்வசங்கல்பம்!

மா:—அவ்வாருயின் எனக்குந்திருப்திதான் விசனப்படாதே போய்ப் போசனத்தை அருந்து நான்பார்த்துக்கொள்ளுகிறேன் மற்றகாரியங்களையெல்லாம்.

[மாலவி செல்லுகிருள்]

அங்கம்-5. 2-வது சின்.

மத்ராபுரி அரண்மனைக் கொலுமண்டபம்.

சாவித்திரியின் திருமணச் சம்பாஷணை.

[சிம்மாசனத்தில் அசுவபதி வீற்றிருக்கின்ருர். மாலவிவருகிருள். மந்திரி முதலானேர் வெளிச்செல்கின்றனர்.]

மா:—பிராணபதி! நமஸ்கரிக்கின்றேன்

அசு:—காதலி! அருகிலிரு. ஏது இவ்வளவு அவசரமாக சொல்லி விடாமல் கூட வந்துவிட்டாய்?

மா:—அரசே! நம் சாவித்திரிக்கு யௌவனமேலிட்டது அவளுக்குத் தகுந்தவரனைத்தேடி மணம் முடிக்காமல் மடியில் நெருப்பைவைத்துக்கொள்வதுபோலன்றோஇன்னும் வைத்திருக்கிறோம்

அசு:—அதே கவலைதானெனக்கும்! அழகிலும் கல்வியிலும், மற்றுமுள்ள குணங்களிலும் அவளுக்கு நிகரான இராசகுமாரர் ஒருவருமில்லையெனச் சொல்லுகிறார்களே! என்செய்வது?

[நாரதமுனிவர் வருகின்றார்]

தரு

மாம் பழநிமலை வாழ்ந்துவருகுவே என்ற மெட்டு.

பல்லவி

ஓம் நமோநாராயணரெகுபதியே—நாளும்
உனதருள்புரிஹரி (ஓம்)

அநுபல்லவி

சாம்பவிசோதர ராம்பவிகனேகா
யாம்புவண்ணஸ்ரீபீ தாம்பரதாரிஹரி (ஓம்)

சரணம்

நாகசயனம ஹாகரலக்குமி நாதபஞ்சாயுத நவநீதா
நரசிம்மாவதாரதுரைரெங்கநாயகநடனசிகாமணி ஜெகநாதா
நாக ரீகசங் கீத கானலோல
நவரஸதமிழ்ச்சதா சிவன்பணிந்திடும்ஹரி (ஓம்)

வசனம்

ஹரே! ராம் ராம் ராம் ... ...

[அசுவபதியும் மாலவியும் ஆசனத்தை விட்டெழுந்து உபசரித்து]

அசு:—
மா:—
} சுவாமி! நமஸ்கரிக்கின்றோம் ஆசனத்தமருங்கள்.

நா:—மங்களமுண்டாக,

முதற்பாகம் முற்றிற்று.

வெளியாகிவிட்டது!　　உ　　வெளியாகிவிட்டது!

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்ற மஹாவித்வான்

T. T. சங்கரதாஸ் சுவாமியவர்களின் மாணாக்கர்

சந்தச்சரபம் ஷண்முகதாஸ் அவர்களியற்றிய

மன்மதன் எரிந்தகட்சி கேள்விலாவணி.

நேயர்களே கவனியுங்கள்!

நம் தமிழ் நாட்டில் இதுவரை எவ்வளவோ லாவணிகள்
வெளியாகியிருக்கின்றன. எனினும் இதைப்போன்ற விசித்திர
மான புத்தகம் வெளிவந்திராதென்பதை இதைவாங்கி வாசிக்கும்
ஒவ்வொருவரும் நன்கறியலாம். இதில் மன்மதன் தேவசபைக்
குச் செல்லுதற்குத் தன் பாரியாளான இரதியிடத்தில் விடை
கேட்குங்கால் இருவருக்கும் நடக்கும் சிங்கார ரஸத் தர்க்கங்
களும், அங்கிருந்து மன்மதன் தனது இருப்பிடமடைந்ததும்
இரதி எதிர்கொண்டழைத்தலும், தன் நாயகனது முகம் வாட்ட
முற்றிருப்பதை யுணர்ந்து, காரணமென்னவென விசாரித்தலும்,
தேவசபையில் நடந்தவற்றைச்சொல்லி, சிவனின் தவத்தை யழிக்
கச்செல்ல மன்மதன் விடைகேட்குங்கால் இரதி துயருற்றுத்தடுத்
தலும், அன்னவட்கு மன்மதன் தேறுதல் சொல்வதுமாகிய தர்க்
கங்களும், தெருப்பந்தல் சிங்காரங்களும், எதிர்க்கட்சியாருடன்
வாதாடும் பற்பல கடினமான கேள்விகளும், மன்மதன் எரிந்த
செய்தியையறிந்த இரதி புலம்பலும் படிப்போர் மனம் பரவச
முறுமாறும், கேட்போர் மனம் கெக்கலித்திடுமாறும் இந்துஸ்
தான் பார்ஸீ முதலிய தற்கால நாகரீக வர்ணமெட்டுக்களில் நன்
கமைந்திருக்கின்றன. சுருங்கச் சொல்லின் இப்புத்தகத்தை ஒரு
முறை படித்துப் பார்க்கில் மறுமுறையும் படிக்கும்படி வற்புறு
த்துமென்பதற்கையமில்லை.　　இதன் விலை 0 6 0

ஷையார் இயற்றிய பேட்டா போட்டி கள்ளப்பாட்டு
இதுவரையில் வெளிவராதது இரண்டுகள்ளன்
களுடைய தர்க்கங்கள் அடங்கியுள்ளது　　0 2 0

ஷையார் இயற்றிய மஹாத்மா காந்தி தியானம்
மதுவிலக்கு மகத்துவம் அடங்கியது　　0 1 0

T. கிருஷ்ணசாமிபிள்ளை,

புத்தக வியாபாரம்,

புதுமண்டபம், மதுரை.

வந்துவிட்டது! உ வந்துவிட்டது!!

முந்துங்கள் புத்தகத்திற்கு முந்துங்கள்

முத்தமிழ் க்ஷேத்திர

M E M.

பாஸ்கரதாஸரவர்களால்

இயற்றப்பெற்ற

அற்புத நூதனக் காவடிச்சிந்து.

இதில் அடங்கியுள்ள பாடல்களும் வர்ணமெட்டுக்களும் நவரஸம் பொருந்தியதாகவே இருக்கும். இதைப்போன்ற விசித்திரமான புத்தகம் வெளிவந்திராதென்பதை இதைவாங்கி வாசிக்கும் ஒவ்வொருவரும் நன்கறியலாம். இதன் விலை அணா ௨.

—※—

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்ற மஹா வித்வான்

T T. சங்கரதாஸ் சுவாமியவர்களின்

மாணவரான சந்தர்சரபம்

M S S சண்முகதாஸரவர்களியற்றிய

பக்தி ஆனந்தக் கேலிப் பதங்கள்.

[இரண்டாமபாகம்]

திருமயிலம் பெருநூலாசிரியர் சி. தணிகாசல சுவாமியவர்கள் திருவாய் மலர்ந்தருளிய முகவுரையுடன் கூடியது.

நேயர்களே கவனியுங்கள்!

இதினருமை, பெருமை, இனிமைகளை எடுத்துரைப்பதென்றால் சாத்தியப்படாது சுருங்கச்சொல்லின் படிப்போர் மனம் பரவசமாகும். கேட்போர் மனம் கெக்கலித்திடும். இந்துஸ்தான், பார்ஸி, முதலிய தற்கால நாகரீகவர்ணமெட்டுக்களில் நன்கமைந்திருக்கின்றன. இதுதான் நிந்தாஸ்துதிக் கீர்த்தனங்கள் தமாஷான பாடல்களென்றால் இதுவே எனபதும் புத்தகத்தைவாங்கி வாசிக்கும் நண்பர்களுக்கே நன்கு விளங்கும். விலை அணா ப்

T. கிருஷ்ணசாமிபிள்ளை,

புத்தக வியாபாரம்,

புதுமண்டபம், மதுரை.